வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 13.08.2022 சனிக்கிழமை | இதழ் : 249 | பக்கங்கள் : 16




# அம்பாந்தோட்டைக்கு வர சீனக் கப்பலுக்கு அனுமதி!

## நேற்று வழங்கியது அரசு

கொழும்பு, ஓகஸ்ட் 13

**சீனாவின் செயற்கைக் கோள் கண் காணிப்பு கப்பலான யுவான் வாங் - 5 கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்து நிற்பதற்கு இலங்கை அரசு நேற்று அனுமதி வழங்கியது.**

இந்தக் கப்பலின் வருகையை எதிர்த் ததற்கு உறுதியான காரணங்களை இந் திய, அமெரிக்க அரசாங்கங்கள் தவறியமையைத் தொடர்ந்தே அனு மதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

‘யுவான் வாங் 5’ இப்போது திட்டமிட்டதை விட ஐந்து நாட்கள் தாமதமாக ஓகஸ்ட் 16ஆம் திகதியன்று அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் நிறுத்தப்படும்.

முன்னதாக, இந்தக் கப்பல் நேற்று முன்தினம் இலங்கை வருவதாக இருந்தது.

பாதுகாப்புக் காரணங்களை 15



# இருப்பிடமின்றி நாடு நாடாக அலைகின்றார் கோட்டாபய!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, ஓக. 13

“இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் மக்கள் தன்னை ஆதரித்து வாக்களித்தனர் என்று வீறாப்புப் பேசி வந்த கோட்டாபய ராஜபக்ஷ இறுதியில் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்

அதுமட்டுமன்றி 15

# இலங்கைக்கு பாப்பரசர் 4 கோடி ரூபா நிதியுதவி



கொழும்பு, ஓக. 13

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 100,000 யூரோ வழங்க பரிசுத்த பாப்பரசர் நடவடிக்கை எடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. 15

# சீனாவின் குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுக்கிறது இந்தியா!

புதுடில்லி, ஓக. 13

“சீனாவின் கப்பல் இலங்கையில் நங்கூரமிடுவதை தடுக்கும் வகையில் எந்த அறிக்கைகளையும் இந்தியா வெளியிடவில்லை”, என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

சீனாவின் கப்பலான யுவான் வாங் - 5 கப்பல் இலங்கைக்கு வருவதை இந்தியா தடுத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்நிலையில், இந்தக் கப்பலின் வருகை விவேகமாகவும் நேர்மையாகவும் பார்க்குமாறும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையி 15

# கொரோனாவுக்கு மேலும் 9 பேர் பலி!

கொழும்பு, ஓக. 13

கொரோனா தொற்று காரணமாக நேற்று முன்தினமும் 9 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து மொத்த பலி எண்ணிக்கை 16,674 ஆக அதிகரித்துள்ளது.

இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில், 30 - 59 வயது பிரிவினரில் 15

# கொழும்பு துறைமுகத்தில் பாகிஸ்தானின் போர் கப்பல்!

கொழும்பு, ஓக. 13

சீனா கட்டிய பாகிஸ்தான் போர்க் கப்பல் பி. என். எஸ். தைமூர் கொழும்பு துறைமுகத்தை நேற்றுக் காலை வந்தடைந்தது.

இந்தக் கப்பல் அதி நவீன ஆயுதங்கள், உணர திறன் (சென்சார்) கருவிகள் மற்றும் லேசர் உதவியுடன் இயங்கக் கூடிய ஏவுகணைகளை கொண்ட 15

# ஹோட்டலைவிட்டு வெளியேறாதீர்கள்! கோட்டாபயவை கேட்டது தாய்லாந்து!!

பாங்கொக், ஓகஸ்ட் 13

தாய்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஹோட்டலை விட்டு வெளியேற வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தலைநகர் பாங்கொக்கில் ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள அவரை பாதுகாப்பு காரணங்களுக்காகவே 15



# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கூட்டமைப்பு சபையில் போராட்டம்

கொழும்பு, ஓக. 13

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் 2,000 நாட்களை கடந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) பாராளுமன்றத்தில் போராட்டமொன்றை முன்னெடுத்தது. 15

# எமது வாழ்நாள் முடிவதற்குள் நீதியின் தீர்ப்பைத் தாருங்கள்!

## 2000ஆவது போராட்ட நிறைவு நாளில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

கிளிநொச்சி, ஓக. 13

எமது வாழ்நாள் முடிவதற்கு முன் நீதியின் தீர்ப்பைக் காண விரும்புகிறோம்.

ஆகவே, மகிந்த, கோட்டாபய உட்பட எம் மீதான இனவழிப்புக்கு காரணமான அனைவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்க

வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கண்ணீர் கோரிக்கை விடுத்துள்ளனர். 15



## இப்படியும் நடக்கிறது...!

ஏற்கனவே முன்னரும் ஒரு தடவை இதுபற்றி எழுதியிருக்கிறேன். பன்றிமயக் கோட்பாடு. அது என்ன பன்றிமயக் கோட்பாடு என்று அதனை முன்னர் படித்திருக்காதவர்கள் கேட்கலாம்.

ஓர் அரசன் ஒருவன் ஓர் அப்பாவிக் குடிமகனைக் கைது செய்து மூன்று மீற்றர் மாத்திரமே பரப்பளவான ஒரு தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான்.

நிரபராதியான அந்தக் குடிமகன் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான்.

'நான் நிரபராதி, ஏன் என்னைக் கைது செய்தீர்கள்? ஏன் என்னைச் சிறையில் அடைத்தீர்கள்?' என்று உரக்கக் கதறினான்.

ஆத்திரமடைந்த அரசனோ, அவனை ஒரு மீற்றர் மாத்திரமே விசாலமான ஒரு தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான்.

மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தான். ஆனால், இம்முறை 'நான் நிரபராதி' என்ற வாதத்தை மறந்துவிட்டான். 'இது என்ன கொடுமை! இந்தச் சிறையில் எப்படி இருப்பது! உறங்குவது! அமர்ந்து கொண்டுதானே உறங்க முடியும்! இது உங்களுக்கே தப்பாகத் தெரியவில்லையா?' எனக் கதறினான்.

சினம் கொண்ட காவலன் இன்னும் நான்கு சிறைக் கைதிகளை அவனோடு சேர்த்து அந்தச் சிறிய கூட்டில் அடைத்துவிட்டான்.

இப்போது ஐந்து பேரும் இணைந்து கூக்குரலிட்டனர். 'எங்களால் முடியாது. நாங்கள் மூச்சுத்திணறி செத்துவிடுவோம். உங்களுக்கு ஈவிரக்கம் எதுவும் இல்லையா?' என புலம்பினார்கள்.

மேலும் சினம் கொண்ட காவலன் ஒரு பன்றியை அவர்களோடு சிறையில் அடைத்து விட்டான்.

விரக்தியடைந்த அவர்கள், 'நாங்கள் இந்த அசிங்கத்தோடு இந்தச் சிறிய கூட்டில் எப்படி இருப்பது! தயவுசெய்து இந்தப் பன்றியை மாத்திரமாவது வெளியே எடுத்துவிடுங்கள் ' எனக் கெஞ்சிக்கேட்டனர்.

தயவு காட்டிய காவலன் பன்றியை வெளியே எடுத்தான்.

அடுத்த நாள் அரசன் அந்தப் பக்கமாக வந்து 'இப்போது உங்கள் நிலை எப்படி?' என்று விசாரித்தான்.

'நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம். எங்கள் பெரிய பிரச்னை தீர்ந்துவிட்டது' என்று பதில் கூறினார்கள்.

இப்படித்தான் எமது நாடுகளில் பன்றிமயக் கோட்பாடு அமுல்படுத்தப்படுகிறது. பன்றியை மாத்திரம் எடுத்து விட்டால் போதும் என்ற கோரிக்கையில் ஆர்ப்பாட்டம் முடிந்துவிடுகிறது. அதற்கு முன்னால் இருந்த விவகாரம், அதற்கும் முன்னால் இருந்த மூலவிவகாரம் எல்லாம் மறக்கடிக்கப்படுகிறது.

புதுப்புது பிரச்னைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். முடிவில் பன்றிமய கோட்பாட்டை அவிழ்த்து விடுகின்றனர். பின்னர் நாம் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக முதன்மைப் பிரச்னைகளை நாமே மறந்து விடுகின்றோம் - மறக்க வைக்கப்படுகிறோம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, நாட்டில் டொலர் கையிருப்பு முற்றாகத் தீர்ந்துபோய்விட, அத்தியாவசிய பொருட்களைக்கூட இறக்குமதி செய்ய டொலர் இல்லாதபோது, எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் வரிசையில் நிற்கவேண்டியதாகிவிட்டது. டீசல் இல்லாததால், மின்உற்பத்தி பாதிக்க பல மணிநேர மின்வெட்டு நடைமுறைக்கு வந்தது.

மக்கள் வீதிக்கு வந்தனர், ஆட்சியாளர்களை விரட்டி அடித்தனர். அரசியலில் காணாமல் போயிருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார், பின்னர் ஜனாதிபதியானார். முன்னதாக கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் போது சர்வகட்சி அரசுக்கு அழைப்பு விடுத்தபோது, பிரதான எதிர்க்கட்சி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் கண்டறிய ஆய்வு தேவையில்லை.

துணிந்து பொறுப்பபேற்ற ரணில், பிரதமரானதும், நாட்டின் நிலைமை குறித்து மக்களுக்கு விளக்கமளித்தார். கோட்டா இருந்தபோது இருந்ததைவிட பல துன்பங்களை எதிர்கொள்ள நேரிடும் என்றார். கூட்டுக்குள் பன்றியை அடைத்ததுபோன்றது அது.

நாடு பொருளாதார ரீதியாக பாரதூரமான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நாட்டை மீட்டெடுக்க முயற்சித்திருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யாமல், அரசாங்கம் - அல்லது ஜனாதிபதியை விமர்சிப்பதிலேயே எதிர்க்கட்சிகள் பிரதானமாக ஐக்கிய மக்கள் சக்தி காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க, மக்கள் இப்போது பன்றியை வெளியேற்றினால் காணும் என்ற நிலைக்கு வந்துவிட்டனர். அவர்களைப் பொறுத்தவரை, இப்போது எரிபொருள் கிடைக்கின்றது, எரிவாயு கிடைக்கின்றது, மின் தடை இல்லை என்கின்றபோது தமது பிரச்னைகளே இல்லாமல் போய்விட்டதாக உணரத் தொடங்கிவிட்டனர்.

ரணிலின் பன்றி மயக் கோட்பாடு வேலைசெய்யத் தொடங்கிவிட்டது தெரிகின்றது. இனி சர்வகட்சி அரசாங்கம் எதற்கு என்று அவர் யோசிக்க தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.!

- ஊர்க்குருவி.

## யாழ். ரத்னா விருதுக்கு விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படும் விருதான "யாழ் ரத்னா" விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக் கலை (தவில், நாதஸ்வரம்,

புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன), கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை), கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு), ஒப்பனைக் கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடன கலைத்துறை களுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம், ஆகிய துறைகளில் யாழ்ப்பாண செயலக பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர்களும், இதுவரை இந்த விருதை பெற்றுக் கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுபடுத்தும் ஆவணப் பிரிதிகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (ஐ)

## இளங்கலைஞர் விருதுக்கு விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு

வழங்கப்படும் விருதான "இளங் கலைஞர்" விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல்,

நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன), கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை), கிராமியக் கலைகள் (கரகம், காவடி,

கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு), ஒப்பனைக் கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனகலைத்துறை களுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம், ஆகிய துறைகளில் யாழ்ப்பாண செயலக பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட ஏறகனவே இளம் கலைஞருக்கான கலைத்துறை சான்றிதழ் மற்றும் இளங்கலைஞர் விருது பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுபடுத்தும் ஆவணப் பிரிதிகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன் தெரிவிததுள்ளார்.

(ஐ)

## தெய்வீக திருக்கூட்ட தொடரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுக்கப் பட்டுவரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக இடம்பெற்று வருகிறது.

இந்த நிகழ்வில், 12ஆம் நாள் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, நல்லை ஆதீன முதல்வர் வண. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், வண. ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின், பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'வழிபாட்டு நடைமுறைகளை விதிகளாகச் சொல்லிய நாவலர் பெருமான்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் சி. கா. கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், திருமதி சங்கீதா ரவிசங்கர் மற்றும் திருமதி ஆரணி பாலச்சந்திரன் ஆகியோரின் சங்கீதக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(ஐ)

## இணைய வழி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

அளிக்கம்பை வனக்குறவர் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

இணைய வழியிலான சந்திப்பு - 8இல் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு (இலங்கை நேரம்) வி. சிவலிங்கம், ந. சச்சிதானந்தன் ஆகியோரின் நெறியாள்கையில் இடம் பெறவுள்ளது.

இதில், மருத்துவர் வேலாயுதம் தேவேந்திராவின் ஒரு பானையின் சமூக வாழ்வாதார செயல்பாடுகள் பற்றிய கலந்துரையாடலைத் தொடர்ந்து அளிக்கம்பை வனக்குறவர் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும்.

14 - 15ஆம் நூற்றாண்டளவில் இலங்கையை வந்தடைந்த பழங்குடிகள், அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள அளிக்கம்பை என்னும் கிராமத்தில் தற்சமயம் குடியிருக்கிறார்கள். இவர்களை வனக்குறவர்கள் என அழைக்கிறார்கள். இந்த சமூகத்தவர்கள் பல வகையிலும் ஒதுக்கப்பட்டு பல பிரச்னைகளை பல ஆண்டுகளாக எதிர்நோக்கி வாழ்ந்து

வருகிறார்கள். இவர்களில் பலர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியுள்ளார்கள். இந்த மக்களில் பெரும்பாலானோர் தெலுங்கு கலந்த தமிழ்மொழி பேசுவதோடு முருகன் வள்ளி, தெய்வானை, பிள்ளையார் ஆகிய கடவுளர்களை வணங்கி வருகிறார்கள். இந்த சமூகத்தவர்களுடைய அத்தியாவசிய தண்ணீர், குடியிருப்பு, தொழில், சிறுவர்கள், கல்வி, சுகாதாரம் ஆகிய தேவைகள் பற்றிக் கலந்துரையாட வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்கு சூம் செயலியில் 857 8997 5607 என்ற அடையாள எண் மூலம் KALVI என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.08.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ‘அரகலய’வின் முடிவு?

மிகவும் ஆர்ப்பாட்டமாக எழுச்சியுற்ற அரகலய, மிகவும் மலினப்படுத்தப்பட்ட நிலையில் முடிவுற்றிருக்கின்றது. ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து அங்குள்ள பொருட்களைக் கையாண்டவர்கள் அனைவரும் தேடப்பட்டு வருகின்றனர். முன்னணியில் இருந்த பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் இதற்காக வாதிட்டவர்கள், இதனை ஆதரித்தவர்கள் பலர் அமைதியாக வெளியேறிவிட்டனர். கொழும்பு மத்தியதர வர்க்க பின்புலம் கொண்ட குழுக்கள் அனைவரும் கிராமங்களிலிருந்து வந்த போராட்டக்காரர்களை நடுவீதியில் விட்டு சென்றுவிட்டனர். இதன்மூலம் போராட்டங்களின் மூலம் அதிகாரங்களைக் கையகப்படுத்தலாம் என்னும் நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கைத் தீவின் வரலாற்றில் புரட்சிகர அரசியல் முன்னெடுப்புக்கள் அனைத்துமே தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிலங்கையின் ஜே. வி. பி. கிளர்ச்சி முற்றிலுமாக நசுக்கப்பட்டது. ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர். ஜே. வி. பியின் தலைவர் ரோகண விஜயவீர இரகசியமாகக் கொல்லப்பட்டார். உண்மையில் அவரை அரசியல் செய்ய அனுமதித்திருக்கலாம் ஆனால், சிங்கள ஆளும் வர்க்கம் அதனை அனுமதிக்கவில்லை.

இதேபோன்று, தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்துக்கு சவாலாக அமைந்த, தமிழ் ஆயுத இயக்க அரசியலை அழிப்பதிலும் - சிங்கள ஆளும் வர்க்கம் ஓரணியில் செயல்பட்டு, வெற்றிபெற்றது. இதில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ, பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ என்னும் பெயர்களில் எவ்வித வேறுபாடும் இல்லை. தமிழர்களின் ஆயுத எழுச்சியை முடக்குவதற்கான வலுவான அடித்தளங்கள் அனைத்துமே, மேற்குலகு சார்பான ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் வலுவாக முன்னெடுக்கப்பட்டது. முதலில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகள், பின்னர் ரணசிங்க பிரேமதாஸவால், வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டது. ஜே. ஆர். - விடுதலைப் புலிகளை, இந்தியப் படைகளுக்கு எதிராகத் திருப்பும் காய்நகர்தல்களை முன்னெடுத்தார். பிரேதாஸ புலிகளையும், இந்தியாவையும் மோத வைப்பதில் வெற்றி பெற்றார்.

சிங்கள ஆளும் வர்க்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்னும் பாகுபாடுகள் இல்லை. ஆளும் வர்க்கம் எப்போதுமே ஒன்றுதான். வேண்டுமானால் கட்சியின் கொடிகள் வேறுபடலாம். சந்திரிகா குமாரதுங்க ஆட்சியிலிருந்த காலத்தில், ஒரு விடயம் மிகவும் வெளிப்படையாகவே பேசப்பட்டது. அதாவது, ஒன்றில் எங்களுக்கு வாக்களியுங்கள் அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள், மூன்றாம் தரப்பான, ஜே. வி. பிக்கு வாக்களிகாதீர்கள் - என்று அப்போது தேர்தல் மேடைகளில் பேசப்பட்டது. இதுதான் ஆளும் வர்க்கத்தின் அரசியல் நிகழ்ச்சிநிரல்.

இந்த பின்னணியில் நோக்கினால், அரகலய எப்போது, இடதுசாரி செல்வாக்குக்கு உட்பட்ட குழுக்களால் கட்டுப்படுத்தப்பட்டதோ, எப்போது தென்னமெரிக்க கிளர்ச்சி முறைமையின் கீழ், ஜனாதிபதி செயலகம் கையகப்படுத்தப்பட்டதோ, அப்போதே சிங்கள ஆளும் வர்க்கம் விழித்துக் கொண்டது. இந்தப் பின்னணியில்தான் ரணில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். உண்மையில் அரகலயவின் உச்ச பயனாளி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். அதன் உச்சப்பயனாளியான அவர், இப்போது அதனை முழுமையாக இல்லாதொழிக்கும் காரியத்தையே ஆற்றிக் கொண்டிருக்கின்றார். பெருமளவுக்கு அவரின் இலக்கு நிறைவேறிவிட்டது.

இலங்கைத் தீவில் அரசை நிலைகுலையச் செய்யும் அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்படும் என்பது மீண்டுமொரு முறை தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில், கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது - தேவைப்பட்டால், அழிப்பது என்பதுதான் உலக ஆளும் வர்க்கத்தின் இலக்காகும்.

# ஜனாதிபதி ரணிலை எச்சரித்த ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள்!

**அலசுவது இராஜதந்திரி**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 51ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெறவுள் ளது.



இலங்கையில் ஒன்பதாவது நிறைவேற்ற திகார ஜனாதிபதியாக அரசியலமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன் றம் மூலமாக தெரிவானதன் பின்னர் இலங்கை முகங்கொடுக்கவிருப்பதே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு தினங்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் “யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே” என்ற பழமொழிக்கமைவாக ஜெனிவா 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்பதாக தற்போது மிகவும் புறக்கணிக்கப் பட்ட நிலையிலுள்ள ஜனநாயக விழுமியங் கள் பலவற்றை பாதுகாப்பதில் அக்கறை செலுத்துங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந் தனர்.

இதன்மூலம் சர்வதேச சமூகம் எவ்வாறு இலங்கையை நோக்குகின்றதென்பதை அறிய முடிகின்ற, அதேசமயம் இலங்கை மீளவும் சர்வதேச அரங்கில் தனது இருப்பைத் தகுந்த விதத்தில் பாதுகாத்துக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டுமென் பதையும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதத்துக்கும் மேலாக நடத்தப்பட்டு வந்த காலிமுகத்திடல் போராட்டம் மற்றும் அதன் ஏற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில், முக்கியமானவர்களாக ஆரப்பாட்டத்தின் முன்னோடியான தனிஸ் அலி விமானத்தினுள் வைத்து கைது செய்யப்பட்டமை, வண. பிதா ஜீவந்த பீரிஸ் மற்றும் ஆசிரியர் தொழில் சங்க முக்கியஸ்தரான ஜோசப் ஸ்டாலினின் கைது என்பவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவையாக இருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய சந்திப்பு என்பது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தையடுத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களால் நடத்தப்பட்ட முதலாவது உயர்மட்ட சந்திப்பு எனவும் குறிப்பிடமுடியும்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிற்செல் பச்லெட் இலங்கையில் 58 இராணுவ உயரதிகாரிகள் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கைது செய்யப்பட வேண்டுமென்று கூறியிருந்தார்.

எனவே மிற்செல் பச்லெட்டின் இக் கோரிக்கை கூட இத்தடவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் பெரிதும் பிரதிபலிக்கும் என்றே எதிர்பார்க்க முடியும்.

ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து குறிப்பிட்டுள்ள விடயங்களாவன: ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை பெறுதல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு உட்பட இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவது குறித்த விடயங்களை ஆராய்வதாகவே இருக்கின்றது. நீண்டகால அரசியல் அனுபவமுள்ளவர் என்ற வகையிலும் முன்பிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைவிட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறக்கூடியவர் என்ற ரீதியிலுமே ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜெனிவா குறித்த விடயங்களில் கரிசனை காட்டுமாறு கேட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் ஒருமித்த குரலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்துள்ள இந்த வேண்டுகோள் இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால் கடந்த காலங்களில் போன்று அடிப்படை மனித உரிமைகள் மீறப்படலாகாது என்பதையே வலியுறுத்துவதாக இருக்கின்றது.

ஆகவே, இதுவிடயத்தில் இலங்கையை பொருளாதார ரீதியாக மேம்பட வைப்பதா அல்லது தொடர்ந்தும் அடிப்படை மனித உரிமைகள் மீறல்களுக்கு இடமளிப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சார்ந்ததாக இருக்கின்றது.

இலங்கை மிகவும் இக்கட்டான அரசியல், பொருளாதார சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்துள்ள தருணத்திலேயே புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

எனவே, அடுத்த மாதம் செப்ரெம்பரில் ஆரம்பமாகவுள்ள 51ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் இலங்கைக்கு சவால் நிறைந்ததாகவே இருக்கும் என்பதை முன்கூட்டியே எச்சரிப்பதாகவே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான ஓரிரு தினங்களுக்கு முன்னரான சந்திப்பு விளங்கியிருந்தது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வியாபாரத்தில் உண்டான தடை விலகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயலில் லாபம் காண்பீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும்.

**இடபம்**
உங்கள் முயற்சி லாபம் தரும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மிதுனம்**
மதியம் வரை உங்கள் செயல் இழுபறியாகும் அதன்பின் நிறைவேறும். பொறுமை தேவை. தடைகளைத் தாண்டி நினைத்ததில் வெற்றி காண்பீர்கள். உங்களுடைய எண்ணம் நிறைவேறும்.

**கடகம்**
கவனமான நாள். மதியத்திற்கு மேல் குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்பட்டு மறையும். மதியம் வரை இருந்த நிலை மாறும். நினைத்த செயலை நிறைவேற்ற கடின முயற்சி எடுப்பீர்கள்.

**சிம்மம்**
அரசு வழியில் உங்கள் முயற்சி பலிக்கும். சுபசெய்தி வீடு தேடி வரும். பிறர் உதவியுடன் உங்கள் எண்ணம் நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.

**கன்னி**
உங்களுடைய முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள். எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**துலாம்**
குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி இன்று நிறைவேறும். பயணங்களால் நன்மை உண்டு.

**விருட்சிகம்**
உறவினர்களின் ஆதரவுடன் உங்கள் தொழிலில் வெற்றி அடைவீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உங்கள் தொழிலில் இருந்து வந்த தடை விலகும். நேற்று ஏற்பட்ட கடனை அடைப்பீர்கள்.

**தனுசு**
கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த பிரச்னை சரியாகும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். நினைத்ததை நிறைவேற்றி லாபம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்

**மகரம்**
தொழிலில் இருந்து வந்த போட்டிகள் விலகும். லாபம் காணும் நாள். மதியத்திற்கு மேல் குழப்பம் விலகும். வேலை வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தவர்களுக்கு தகவல் வந்து சேரும்.

**கும்பம்**
புதிய பாதையில் பயணிப்பீர்கள். உங்களுக்கு தொல்லை கொடுத்து வந்தவர்கள் விலகுவர். நேற்றைய பிரச்சனையை சரி செய்வீர்கள். தொழிலில் லாபம் காண்பீர்கள்.

**மீனம்**
வியாபாரத்தில் திட்டமிட்டு லாபம் காண்பீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் திட்டங்களை மாற்றி அமைப்பீர்கள்.

# கறுப்பு சட்டை அணிந்தே பெரியார் தமிழரின் நம்பிக்கையை பெற்றார்!

*சென்னை, ஒக. 13*

பெரியார் கறுப்புச் சட்டை அணிந்தே தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றார் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.



கறுப்புச் சட்டை தொடர்பான பிரதமர் மோடியின் பேச்சுக்கு பதில் அளித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதரம்பரம் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"கறுப்புச் சட்டை அணிந்தவர்கள் ஒருபோதும் மக்களின் நம்பிக்கையைப் பெற மாட்டார்கள் என்று பிரதமர் மோடி கூறியிருக்கிறார் தந்தை ஈ. வெ. ரா. பெரியார் தம் வாழ்நாள் முழுதும் கறுப்புச் சட்டையை அணிந்தார். அவர் தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றார் (சனாதனவாதிகளைத் தவிர) என்பதை நாடறியும்" என்று கூறியுள்ளார்.

(ஐ)

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

*சென்னை, ஒக. 13*

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி படகையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்பது மீனவர்கள் 6-8-2022 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 10-8-2022 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகையும் இலங்கை அரசு விரைவில் விடுவிக்கத்



தேவையான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 75ஆவது இந்திய சுதந்திர தினத்தை கொண்டாட தயாராகிறது சென்னை!

*சென்னை, ஒக. 12*

75ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தையொட்டி சென்னை மாநகரம் மின்னொளி அலங்காரத்தில் ஜொலித்து வருகிறது.

75ஆவது சுதந்திர தின விழா வருகிற 15ஆம் திகதி நாடு முழுவதும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சென்னையின் பல இடங்களில் மின் விளக்குகள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. சென்னையின் பழமை வாய்ந்த முக்கிய கட்டடங்கள் அனைத்திலும் 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தையொட்டி வண்ண வண்ண மின்விளக்குகள் மற்றும் பலூன் அலங்காரங்கள் செய்யப்பட்டு பிரமாண்டமாக காட்சி அளித்து வருகின்றன.

சென்னை மத்தி, எழும்பூர் ரயில் நிலைய பாரம்பரிய கட்டடங்களில் மூவர்ண தேசியக் கொடி அலங்காரத்தில் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு ஜொலித்து வருகின்றன.

தலைமைச்செயலகம் அமைந்துள்ள சென்னை சென். ஜோர்ஜ் கோட்டையும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்தை வரவேற்கும் விதமாக ஆர்வமுடன் மக்கள் அலங்கார பணிகளில் ஈடுபட்டு மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

(ஐ)

# எடப்பாடி பழனிசாமியின் உயிருக்கு அச்சுறுத்தலாம்!

*சென்னை, ஒக. 13*

எடப்பாடி பழனிசாமியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு அளிக்குமாறும் தமிழ்நாடு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. கவில் ஒற்றை தலைமை விவகாரம் காரணமாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ. பன்னீர்செல்வத்துக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது. இருவரும் தனித்தனியாக ஆதரவாளர்களை திரட்டி செயல்பட்டு வருகிறார்கள்.

அ. தி. மு. க. பொதுக்குழுவில் இடைக்கால பொதுச்செயலாளராக தெரிவுசெய்யப்பட்ட பிறகு எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்திலும் ஈடுபட்டு வருகிறார்.

ஓ.பன்னீர்செல்வமும் அவரின் முக்கிய ஆதரவாளர்களும்



அ. தி. மு. க.வில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்களும் காரசாரமான கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி சுதந்திர தினத்துக்கு பிறகு தென் மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். சென்னையில் இருந்து விமானத்தில் தூத்துக்குடி சென்று அங்கிருந்து எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தை தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்லை, தென்காசி, குமரி மாவட்டங்களிலும் மதுரை மற்றும் தேனி மாவட்ட பகுதிகளிலும் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் செல்வதற்கு ஆயத்தமாகி வருகிறார். அவரின் இந்த சுற்றுப் பயணத்தின் போது அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்களால் பிரச்னை ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் டி.ஜி.பி. அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் மீண்டும் அதிகரிக்கும் கோவிட்

### கடந்த 11 தினங்களில் 103 தொற்றாளர்கள் அடையாளம்

மன்னார், ஓக. 13

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களில் கொரோனா தொற்று மிகவும் அதிகமாக காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ள நிலையில் இந்த மாதத்தின் முதல் 11 நாட்களில் மொத்தம் 103 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களாக கொரோனா தொற்று மிகவும் அதிகமாக காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மொத்தம் 967 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்த மாதத்தின் முதல் 11 நாட்களில் மொத்தம் 103 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றானது சாதாரண தடிமன், தலையிடி, தலைப்பாரம் ஆகிய அறிகுறிகளுடன் காணப்படுகின்றது.

இவர்களில் அதிகமானவர்கள் வீடுகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கின்றார்கள். அதற்கு அமைவாக எம்மால் அடையாளம் காணப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை உண்மையான எண்ணிக்கையை விட மிகக் குறைவாக இருக்கும்.

103 நோயாளர்கள் எம்மால் கண்டறியப்பட்டால் இதைவிட 7 அல்லது 8 மடங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு வருகை தராமல் சுய சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடுகளில் தங்கி இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

இந்த தொற்றானது சாதாரண நிலையில் காணப்பட்டாலும் கூட ஒரு சமூகத்தில் மிகவும், குறுகிய காலத்தில் பரவும் போது திரிவடையக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது.

இவ்வாறு திரிவடைந்தால் வீரியம் கூடிய வைரஸ் ஒன்று இந்த சமூகத்தில் உருவாகி பரவினால் அதிக உயிரிழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பொது மக்களை வீட்டில் தங்கி இருக்கவோ அல்லது பிரதேசங்களை முடக்கவோ முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே பொது மக்கள் இவ்வாறான சூழ்நிலையில் கட்டாயம் முக கவசங்களை அணிந்து கொள்ளவேண்டும்.

கூடிய அளவில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த இடங்களில் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும்.

மாவட்டத்தில் இதுவரை 20 வயதிற்கு மேற்பட்ட 64 சதவீதமானவர்கள் முதலாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசி, அல்லது 3 ஆவது பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளார்கள். இதைவிட அதிகமாக வடமாகாணத்தில் அதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பூசியாக இருந்தாலும் கூட அதைவிட அதிகமானவர்கள் தடுப்பூசியை பெற்றுக் கொண்டால் மட்டுமே இந்த தொற்று சங்கிலியை உடைக்க முடியும்.

எனவே மூன்றாவது அல்லது மேலதிக வலு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக உங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அல்லது பொது சுகாதாரப் பரிசோதகர்களை தொடர்பு கொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், மற்றும் 20 வயதிற்கு மேற்பட்ட விரும்பியவர்கள் தமது நான்காவது தடுப்பூசியை அல்லது 2 ஆவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

இவர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளை நாடி நமது உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் மன்னார் மாவட்டத்திலேயே மிக குறைந்த அளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டும், குறைந்த அளவான கொரோனா மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

சுகாதார திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் துரித நடவடிக்கை காரணமாகவும், கடந்த காலங்களில் பொது மக்கள் வழங்கிய ஒத்துழைப்பு காரணமாகவும் சாத்தியமாகியது.

இவ்வாறான ஒரு ஒத்துழைப்பை தற்போதைய கடினமான கால கட்டத்திலும் எதிர்பார்த்துள்ளோம். மக்கள் கட்டாயம் சுகாதார வழிமுறைகளை கையாளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதேவேளை கடந்த வருடத்தின் இறுதியில் தொடங்கிய டெங்கின் தாக்கம் இந்த வருட ஆரம்பத்திலும் காணப்பட்டது.

இந்த வருடத்தின் தற்போது வரை 177 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் மன்னார் தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

தற்போது டெங்கு நுளம்பின் தாக்கம் குறைவடைந்திருந்தாலும், மழை காலம் ஆரம்பிக்கும் போது டெங்கு நுளம்பின் தாக்கம் மீண்டும் அதிகரிக்க சந்தர்ப்பம் உள்ளது. எனவே பொது மக்கள் தமது சுற்றாடலை கட்டாயம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மடு திருத்தலத்தில் தற்போது திருவிழா இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 15ம் திகதி இறுதி திருவிழா திருப்பலி இடம்பெற உள்ளது.

அதிக அளவிலான பொது மக்கள் மன்னாரில் இருந்தும், நாட்டின் ஏனைய இடங்களில் இருந்தும் மடு திருத்தலத்திற்கு வருகை தந்து கொண்டிருக்கின்றனர். இந்த மக்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கட்டாயம் பின்பற்றவேண்டும்-என்றார். (அ)

# கனிந்துவந்துள்ள சூழலை சரிவர பயன்படுத்துங்கள்

### தமிழ் தரப்புக்களுக்கு டக்ளஸ் அழைப்பு



கொழும்பு, ஒக. 13

**சுயலாபம் அற்று அறிவார்ந்து சிந்தித்து கனிந்துள்ள சூழலை சரிவரப் பயன்படுத்துமாறு தமிழ் அரசியல் தரப்பினருக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டு வருகின்ற எரிபொருள் பிரச்னையை தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், இன்னும் சில தினங்களில் குறித்த விவகாரத்திற்கு தீர்வை வழங்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பாக பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள், இந்த நாடு முகங்கொடுத்திருந்த நெருக்கடி நிலைமையில், இந்த அரசுக்கெதிராக எழுந்திருந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில், இந்த நாட்டின் பிரதமர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்வருமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளிடமும். கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஆசையிருந்தும், அச்சம் காரணமாக பலரும் பின்வாங்கியும், நிபந்தனைகளை விடுத்தும், தப்பித்தும் கொண்டும் இருந்த நிலையில், இந்த சவாலை தைரியமாக ஏற்க முன்வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

எந்தவொரு விடயம் குறித்தும் நடைமுறைச் சாத்தியமாக சிந்தித்து, முடிவெடுக்கும் நாம், இந்த நாட்டின் சவால்கள் மிகுந்த இக்காலகட்டத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆற்றல் குறித்து திடமான நம்பிக்கைக் கொண்டிருந்தோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் சதி காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்யவிருந்த நிலையில், பதில் ஜனாதிபதியாகவும் இடைக்கால ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்று எமது நாடு முகங்கொடுத்து வருகின்ற பிரச்னைகளுக்கு தீர்வினைத் தேடித் தரக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்க என்ற உறுதியான நம்பிக்கை எம்மிடம் இருந்ததால், எமது ஆதரவினை பகிரங்கமாகவே அவருக்கு வழங்க முன்வந்திருந்தோம்.

பாராளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்வாரா இல்லையா என்பதற்கு அப்பால் எமது தேசத்தின் இன்றைய பொருளாதார சவால்களை அவரே வெல்வார் என்றே அவரை நாம் அரசியல் துணிச்சலோடு ஆதரித்தோம். நாம் விரும்பியது போல் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறியிருக்கின்றார். தனது சிம்மாசன உரையில் அவர் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காண சர்வகட்சி அரசுக்கான அழைப்பை விடுத்துள்ளார். இது ஒரு அரிய வாய்ப்பு. சகல தரப்புடனும் இணைந்து சக தமிழ் தரப்பும் இதை சரிவரப்பயன்படுத்த முன்வரவேண்டும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடக்கம், அதை ஏற்றவர்கள், ஏற்காதவர்கள் உட்பட வரலாறெங்கும் இதுவரை காலம் எமக்கு கிடைத்த அரிய வாய்ப்புகள் யாவும் பன்றிகளுக்கு முன்னால் போடப்பட்ட முத்தாகவே கடந்து போய் விட்டன. இன்று கனிந்துள்ள அரிய வாய்ப்பையாவது சுயலாபம் அற்று அறிவார்ந்து சிந்தித்து சரிவர பயன்படுத்த முன்வருமாறு சக தமிழ் தரப்பினருக்கு மீண்டும் நான் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஐம்பது அம்ச திட்டத்தை முன்மொழிந்திக்கிறார். அதில் தமிழ் பேசும் மக்கள் சார்பாக நாம் முன்வைத்திருக்கும் பத்து அம்ச கோரிக்கைகளும் உள்ளடங்கியிருக்கின்றன. இவைகளை நடைமுறைப்படுத்த அரசியல் கட்சி வேறுபாடுகளை கடந்து செயலாற்ற முன் வருமாறு நான் சகல கட்சிகளையும் அழைக்கின்றேன்-என்றார். (அ)

# புல்லை மேய்ந்த மாட்டின் கால் துண்டாக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முன்கோடை பகுதியில் காணியொன்றினுள் புல்மேய்ந்த மாட்டின் கால் துண்டாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று தினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் முன்கோடை பகுதியில் காணியொன்றில் மேய்ச்சலுக்காக நின்ற பசு மாட்டின் பின் கால் ஒன்றும் மற்றைய காலில் வெட்டுக்காயமும் ஏற்படும் வகையில் விசமிகளால் மாடு தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் உரிமையாளரால் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாடு இறக்கும் நிலைக்கு சென்றுள்ளதாகவும் எதுவித உணவும் உட்கொள்ளாமல் இருப்பதாகவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாட்டின் உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பாக பசு மாட்டின் உரிமையாளர் வறுமைக் கோட்டுக்குட்பட்டவராகவும் குறித்த பசுமாட்டின் மூலம் பெறப்படும் பசுப்பாலை விற்பனை செய்வதையே ஜீவனோபாயமாக கொண்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த முன்னாள் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், குறித்த பசு மாட்டை பார்வையிட்ட நிலையில் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் அவர்கள் சம்பவ இடத்திற்கு விரையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு தொடர்பு கொண்டு குறித்த சட்டவிரோத செயற்பாட்டுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கோரினார். சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வாக்குமூலத்தை பதிவு செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தார்.

இதனையடுத்து சங்கானை பிரதேச செயலரிடமும் இது குறித்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி சிகிச்சைகளை மேற்கொண்டார். (அ)

# சர்வகட்சி அரசு குறித்து முடிவு எட்டப்படவில்லை

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13

"சர்வகட்சி அரசுக்கு எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசுக்கான உத்தியோகபூர்வ அழைப்பு இன்னும் விடுக்கப்படவில்லை. எனினும், அமைச்சுப் பதவிகளை மட்டும் இலக்காகக்கொண்ட அரசாக அது அமையக்கூடாது. நாம் அமைச்சுப் பதவிகளைப் பெறப் போவதும் இல்லை.

எனினும், சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். அரசின் நடவடிக்கையில் வெளிப்படைத்தன்மை இருந்தால் மாத்திரமே அந்த ஒத்துழைப்பு வழங்கப்படும். தற்போதுவரை அந்த வெளிப்படைத் தன்மையைக் காணமுடியவில்லை. நாமும் இறுதி முடிவை எடுக்கவில்லை-என்றார். (அ)

# சீன கப்பல் விவகாரத்தில் உடனடி இராஜதந்திர தலையீடு அவசியம்!

## தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 13

**சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள சீனாவின் யுவான் வேங் - 5 ஆய்வுக் கப்பலின் இலங்கை பயணம் தொடர்பில், உடனடியாக உயர்மட்ட இராஜதந்திர தலையீடுகள் செய்யப்பட வேண்டும் என முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

அது வெளிவிவகார அமைச்சர் ஊடாகவோ அல்லது ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஒருவர் ஊடாகவோ அல்லது பிரதமரின் தலையீடாகவோ இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விசேட பிரதிநிதி, உடனடியாக சீனாவுக்கும், இந்தியாவுக்கும் சென்று, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைநிலைத் தீர்வுக்கு வருவது அவசியமானதாகும் என கலாநிதி தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவை கோபப்படுத்திக் கொண்டால், கடன் மறுசீரமைப்பு அல்லது வேறு கடனைப் பெற்றுக்கொள்வதில் பாரிய பிரச்னை ஏற்படும்.

அதேநேரம், இந்தியாவை கோபப்படுத்திக்கொண்டால், அங்கும் பாரிய பிரச்னை ஏற்படும். எமது அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானதை வழங்கியது இந்தியா என்ற நண்பராவார்.

எமக்கு அவசியமான சந்தர்ப்பத்தில், இந்தியா இவ்வாறாக நட்புறவை வெளிப்படுத்தும் நிலையில், இந்தியாவுக்கு பாதுகாப்பு பிரச்னையை ஏற்படுத்தக்கூடிய சீனாவின் கப்பலுக்கு இடமளிப்பதாயின், அதனூடாக தாமாகவே குழியை வெட்டிக்கொண்டு, அதற்குள் இந்த அரசாங்கம் வீழ்ந்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் ஆசனத்தில் யார் அமர்வது என்பது குறித்து ஆராயாமல், நாட்டின் இராஜதந்திர உறவு குறித்து பரந்தளவில் சிந்தித்து செயற்படவேண்டும்.

இந்த சீனக் கப்பல், விமானத்தில் கொண்டுவந்து இறக்கப்படும் ஒன்றல்ல.

இது அவசரமாக இடம்பெற்ற ஒன்றல்ல. இந்தக் கப்பலை அனுப்புவது குறித்து, சீனா விடுத்த கோரிக்கைக்கு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு எழுத்துமூலம் இணக்கம் தெரிவித்தது.

இது, எந்த வகையிலான கப்பல் என்பதை வெளிவிவகார அமைச்சு அறிந்திருக்கவில்லையா? குறித்த கப்பலில் அதிநவீன இலத்திரனியல் கட்டமைப்பு உள்ளது.

இந்தியா இதனை எவ்வாறு நோக்கும். இந்தக் கப்பல், பயணிகளை ஏற்றிச்செல்லும் கப்பல் அல்ல. 2015 இல் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று தொடர்பில் இதுபோன்ற பிரச்னை ஒன்று ஏற்பட்டது.

எனவே, இதுபோன்ற ஒன்று எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து முதலில் விசாரணை நடத்தி, அந்த நபர்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# கோட்டாபயவின் அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மனு தாக்கல்!

கொழும்பு, ஓக. 13

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு வருவதற்கு, அவரது அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் என்பவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி இலங்கையின் பல்வேறு இடங்களில் மறைந்திருந்து மாலை தீவுக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூர் சென்று தாய்லாந்தில் பாதுகாப்புக் கோரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பிரஜையும், முன்னாள் முதற் குடிமகனுமான அவருக்கு இலங்கையில் சுதந்திரமாக வசிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்று ஓஷல ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)

# கிளிநொச்சியில் நகைக்கடையின் உரிமையாளரை கடத்தி தாக்குதல்!

## *10 பவுண் தங்க நகைகளும் கொள்ளை!!*

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சியில் நகைக் கடை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் ஒருவர் வியாபார நடவடிக்கை முடித்து வீடு சென்று கொண்டிருந்தபோது வானில் வந்த அடையாளம் தெரியாத நபர்களினால் கடத்தி தாக்கப்பட்டதுடன் கடையை திறக்க வைத்து 10 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நகைக்கடை வைத்திருக்கும் குறித்த நபர் வியாபார நடவடிக்கைகளை முடித்து நேற்று முன் தினம் இரவு வீடு சென்றுகொண்டிருந்தபோது பன்னங்கண்டி பகுதியில் வைத்து வானில் வந்தவர்களால் வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார்.

வானில் வந்த அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட நகைக்கடை உரிமையாளரை வானில் ஏற்றி நீண்ட நேரம் வைத்து தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் அதிகாலை 1 மணியளவில் நகைக்கடைக்கு அழைத்துச் சென்று கடையை திறக்குமாறு மிரட்டி அங்கிருந்து 10 பவுண் தங்க நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர். கடை உரிமையாளர் காயங்களுக்கு உள்ளான நிலையில் அங்கேயே விட்டு செல்லப்பட்டார்.

பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் உறவினர்களின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரணிலின் சர்வகட்சி அரசு எனும் வலையில் விலை போகும் அரசியல்வாதிகள் வீழ்வர்!

## கூறுகின்றார் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஓக. 13

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரித்துள்ள சர்வகட்சி அரசு எனும் வலையில், விலை போகும் சில அரசியல்வாதிகள் நிச்சயம் வீழ்வார்கள்."

- இவ்வாறு ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

தமது அணியில் இருந்து பிரிந்து சென்றவர்களை வளைத்துப் போடுவதற்காக அமைச்சுப் பதவி குறித்து ரணில் பேரம் பேசி வருகின்றார். அத்துடன், ஊழல், மோசடிகளைக் காட்டி, "மொட்டு"க் கட்சியினரின் ஆதரவையும் திரட்டியுள்ளார்.

உரிய நேரம் வரும்போது விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, ரத்ன தேரர் போன்றவர்களும் ரணிலின் பிடிக்குள் சிக்குவார்கள். ஆளுங்கட்சி பக்கம் சாய்ந்துவிட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமும்கூட.

இப்படியான அரசியல் நிகழ்ச்சி நிரல் கொண்ட அரசில் நாம் எப்படி இணைவது? எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது?-என்றார். (அ)

# லுணுகல பிரதேசத்தில் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சிறுமி மீட்பு!

கொழும்பு, ஓக. 13

லுணுகல பிரதேசத்தில் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் குழுவொன்று மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

14 வயது சிறுமி ஒருவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி இந்த சிறுமி கடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளதுடன், லுணுகல பொலிஸாரின் அறிவித்தலுக்கு அமைய பசறை மற்றும் லுணுகல பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் இந்த கூட்டுச் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி, கடத்தப்பட்ட சிறுமி மற்றும் சிறுமியை கடத்திய சந்தேக நபர்கள் இருவரும் லுணுகல உடகிருவ காட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

லுணுகல மற்றும் பேருவளை பிரதேசத்தில் வசிக்கும் 18 வயது மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக லுணுகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(அ)

# நாட்டை மீட்க உரிய வேலைத்திட்டத்தை முவைத்தால் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு

## ஜயந்த சமரவீர எம்.பி. அறிவிப்பு



கொழும்பு, ஓக. 13

"நாட்டை மீட்பதற்கான உரிய வழிகாட்டல்கள் அடங்கிய வேலைத்திட்டம் முன்வைக்கப்படுமானால் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கப்படும்."

- இவ்வாறு விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எனினும், தனி நபர்களைத் திருப்திப்படுத்தவும், அமைச்சுப் பதவிகளுக்காகவும் சர்வகட்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# இந்தியா-அமெரிக்கா-சீனா இடையே சீனக் கப்பல் விவகாரத்தால் இழுபறி!

## வாஷிங்டன் போஸ்ட் தகவல்

வாஷிங்டன், ஓக. 13

**சீன உளவு கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைதரும் விடயம் இந்தியா - அமெரிக்கா - சீனா நாடுகளுக்கு இடையே அரசியல் இழுபறி நிலையை ஏற்படுத்தியிருப்பதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.**

சீனாவின் இராணுவ கப்பல்களை அம்பாந்தோட்டையிலிருந்து வெளியேற்றவேண்டும். அவ்வாறு செய்யாது போனால், அந்த நாட்டின் மக்கள் விடுதலை இராணுவம் முக்கியமான கப்பல் பாதைகள் மற்றும் பாரசீக வளைகுடாவுக்கு அருகில் மூலோபாயமான இடத்தில் காலூன்றிவிடும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் சீன கடற்படை கப்பல் ஆயுதமற்ற நிலையிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது. அதன் பயணப்பாதை தெரியவில்லை.

எனினும் கப்பலை எப்போது நிறுத்துவது என்பது குறித்து இலங்கை அதிகாரிகள் சீன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் என்று இலங்கை வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி ஒருவரை கோடிட்டு வாஷிங்டன் போஸ்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக, 730 அடி நீளமுள்ள இந்த சீன செயற் கைக்கோள் கண்காணிப்புக் கப்பல், காரணமாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் அரசியல் இழுபறி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைய ஆண்டுகளில், வாஷிங்டனும் புதுடில்லியும் சீனாவை எதிர்க்கும் நோக்கில் இந்தியப் பெருங்கடலில் தங்கள் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தியுள்ளன.

இதன் ஒரு கட்டமாக கடந்த வாரம், பழுதுபார்ப்பதற்காக அமெரிக்காவின் கடற்படை கப்பல் ஒன்றுக்கு சென்னை துறைமுகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவே இந்திய துறைமுகம் ஒன்றில் அமெரிக்க கடற்படை கப்பல் ஒன்று பழுதுபார்ப்பதற்காக அனுமதிக்க முதல்தடவை என்றும் வாஷிங்டன் போஸ்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பொதுமக்கள் பயப்பட முடியாது!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 13

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பொதுமக்கள் பயப்பட முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சீன ஆராய்ச்சிக் கப்பல் தொடர்பில் சீனா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவுகள் தொடர்பில் தற்போது நாட்டில் உரையாடல் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

நம்பிக்கை இல்லாத மற்றும் சர்வதேச பிரச்னைக்கு தீர்வு



காண முடியாத அரசாங்கம் எவ்வாறு பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மக்கள் போராட்டம் முடிவடைந்துள்ள நிலையில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி தெரிவித்தார் எனவும் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்காக அதனைத் தொடரவேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான கூற்றின் பின்னணியில் உள்ள அர்த்தம் தொடர்பில் கேள்வியெழுப்பிய அவர், பொருளாதார சீர்திருத்தங்களை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளத் தவறினால் அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார். (அ)

# வெளிநாடு செல்ல காத்திருக்கும் ஐந்து இலட்சம் அரச ஊழியர்கள்!

கொழும்பு, ஓக. 13

அரசாங்க ஊழியர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் சுமார் 500,000 பேர் வெளிநாடு செல்ல தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களை அனுப்பும் பொறுப்பை மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்பு துறையிடம் ஒப்படைத்ததன் மூலம் அரசு மேலும் சிக்கலில் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

தம்மை நாட்டுக்கு அனுப்புவதற்கு உரிய வேலைத்திட்டத்தை மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்பு துறை தயாரிக்கவில்லை எனச் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தற்போது முறைப்பாடு செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் அரச ஊழியர்களின் சுமையை குறைக்கும் நோக்கில் இந்த வருட இறுதிக்குள் குறைந்தபட்சம் 5,000 அசர ஊழியர்களை வெளிநாட்டு தொழிலுக்காக அனுப்ப மனித வளம் மற்றும் வேலைவாய்ப்பு துறை எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ)




# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரால் முள்ளந்தண்டு வடம் பாதித்த ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

இயற்கை உபாதைக்கு உட்பட்டு முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்ட கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒருவருக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரால் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண கோவில் வீதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்.கிளை அலுவலகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை நிர்வாக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# கைதான தனிஷ் அலி உட்பட நால்வருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 13

காலி முகத்திடல் போராட்டக்காரரான தனிஷ் அலி உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

# அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் நேற்று பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 13

சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் முன்னனி செயற்பாட்டாளராக அறியப்படும், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, அருட்தந்தை ஜீவந்த பீரிஸை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு மின் கட்டண சலுகை வழங்கப்படும்

கொழும்பு, ஓக. 13

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின்சார கட்டணம் தொடர்பாக சில சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என எதிர்பார்ப்பதாக பாராளுமன்றத் தலைவர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதில் சலுகைகளுக்கு தகுதியான குழுக்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பில் தற்போது அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நிவாரணம் பெறவேண்டிய குழுக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# அம்பாறை மாவட்டத்தில் தலைதூக்கியுள்ள மாட்டிறைச்சி அரசியல் !

- நூருல் ஹுதா உமர்

நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக மூச்சுவிடுவதாக இருந்தால் கூட சாதாரண ஒருவருக்கு தினம் 5000 ரூபாய்க்கு மேல் தேவை எனும் நிலை உருவாகியுள்ளது. அதில் பல்வேறு மாபியாக்களும், மனசாட்சி இல்லாதவர்களின் செயலும் அதிகமாக ஆதிக்கம் செலுத்துகிறது. இப்படியான பெரும் மாபியா கடலிலிருந்து ஒரு துளியை பிரித்தெடுத்தது போல அம்பாறை மாவட்டத்தில் சில நாட்களாக பேசுபொருளாக மாறியிருக்கும் இறைச்சி விலை பிரச்சினையை ஆராய்ந்தால் பல்வேறு இடியப்ப சிக்கல்களையும், அதிகார வர்க்கத்திற்கு வர்த்தகர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.



**கல்முனை முதல்வரின் அறிக்கைக்கு கடையை மூடிய இறைச்சி கடைக்காரர்கள்**

சொந்தமான விலங்கறுமனையையோ அல்லது சொந்தமான இறைச்சிக்கடைகளையோ கொண்டிராத கல்முனை மாநகராட்சி இந்த இறைச்சி விலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அதன் பகுதியாக கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் அதிகூடிய கட்டுப்பாட்டு விலையாக 1,600 ரூபாவை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் நிர்ணயித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மாநகர சபை தரப்பு நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சி 2,200 ரூபாய்க்கு மேல் விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய மேற்படி கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2022.08.06 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில், இந்த நிர்ணய விலையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மாநகர மேயரால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு கிலோகிராம் மாட்டிறைச்சி 1,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அதில் ஆகக் கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் கல்முனை முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை, இறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ இறைச்சியை ஆகக்கூடியது 1,300 ரூபாய்க்கு வழங்க வேண்டும் எனவும் மேயரால் உத்தர விடப்பட்டிருக்கின்றது. இதனை மீறும் மாட்டு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன், மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இம்மாதம் 05ம் திகதிவரை 2000- 2200 ரூபாய் வரை கல்முனை மாநகர எல்லைக்குள் இறைச்சி விற்கப்பட்டதுடன் 06ம் திகதி முதல் பெரும்பான்மையான இறைச்சி கடைகள் முதல்வரின் அறிவிப்பின் காரணமாக மூடப்பட்டுள்ளது. கடைகளை மூடியமைக்கு காரணமாக இறைச்சி கடைகளில் மேயரினால் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு இறைச்சியை விற்க முடியாது என்கின்றனர் இறைச்சி கடைக்காரர்கள். இறைச்சி விலை ஏன் அதிகரிக்கின்றது என்ற கேள்விக்கு விடை தேட வேண்டியது இறைச்சிக்கடைக்காரர்களைத் தாண்டி இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவோரின் கைகளிலும் தங்கியுள்ளது என்பதனை ஒரு கனம் புரிந்துகொள்ள வேண்டும். பல லட்ச ரூபாய்களுக்கு கடைகளைக் குத்தகைக்கு விட்டால் நாளுக்கொரு விலையை அவர்களும் அதிகரிப்பதில் நியாயமும் இல்லாமல் இல்லை. அவ்வாறான தொகைக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டு விலையைப் பற்றிப் பேசுவதில் நியாயமும் இல்லை. அவ்வாறான பெருந்தொகைக்குக் குத்தகைக்கு பெறும் அவர்கள் அவர்களது வாழ்வாதாரம், இலாபம், அடுத்த முறை குத்தகைக்குப் பெறுவதற்கான பணத்தினை சேகரித்தல் போன்ற விடயங்களில் கவனஞ்செலுத்துவதால் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றதே தவிர இங்கு டொலர் தட்டுப்பாட்டிற்காக விலை அதிகரிக்கப்படுவதில்லை. இந்நிலையில் மாற்றம்பெற வேண்டுமானால் முதலில் குத்தகையை நிர்ணயம் செய்து குறிப்பிட்ட ஒரு சிறு தொகைக்குக் குத்தகைக்குக் கடையை வழங்கி விட்டு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்தால் மக்களும் கடையைக் குத்தகைக்கு எடுத்தவரும் நன்மையடைவார்கள் என்பதில் ஐயமில்லை. மக்களின் வயிற்றில் அடித்து கட்டிடங்களை கம்பீரமாகக் காட்சிப்படுத்தி என்ன பயன்? மாற்றத்தை எதிர்பார்க்கும் நம்மிடமிருந்து முதலில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற நியாயமான கருத்தொன்று பொதுவெளியில் இந்த பிரச்சினைகளின் பின்னர் உலவுகிறது.

இறைச்சி விலை நிர்ணயத்தில் பிராந்தியத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் ஒருமித்த ஒரு விலை நிர்ணயத்திற்கு வரவேண்டும். கல்முனையில் ஒரு விலை, அக்கரைப்பற்றில் ஒரு விலை, நிந்தவூரில் ஒரு விலை, அட்டளைச்சேனையில் ஒரு விலையும் சம்மாந்துறையில் ஒரு விலையும் இருக்கக்கூடாது. இதனால் கடந்த காலங்களில் மாட்டு வியாபாரிகளுக்கும் இறைச்சிக்கடைக்காரர்களுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் இடையில் இணக்கப்பாடு இன்மையும், தான்தோன்றித்தனமான விலை அதிகரிப்பும் காணப்பட்டது. எனவே சபைகள் ஒன்றினது இறைச்சி விற்பனையுடன் சம்மந்தபட்ட மாட்டு வியாபாரிகள் , கடைகாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிராந்தியத்திற்கான ஓர் விலை நிர்ணயம் செய்யுங்கள். இது இறைச்சிக்கு மட்டுமல்ல மீன் வியாபாரத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். செல்வமீன் 1000 ரூபாவுக்கு மேல், வெட்டு மீன் 2400 ரூபாவுக்கு மேல், சாலை மீன் 1000 ரூபா, கீரி 1400 ரூபா தவிர கடல் மீனுக்குதான் எரிபொருள் தட்டுப்பாடு என்றால் ஆற்று மீனுக்கும் இந்த நிலைதான் என்கின்றனர் நுகர்வோர். கோழி இறைச்சிக்கும் இதுதான் நிலைமை.

மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து, அதனை இறுக்கமாக அமுல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இருந்து தான் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. 2022.08.06 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் இதனை அமுல் நடத்துவதற்கு மாட்டிறைச்சி வியாபாரிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனாலும் குறித்த தினத்திலிருந்து பெரும்பாலான இறைச்சிக் கடைக்காரர்கள் இறைச்சிக் கடைகளை திறக்காமல், வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். இன்னும் சில நாட்களுக்கு இந்நிலை தொடரலாம். உண்மையில், நிர்ணய விலைக்கு இறைச்சியை விற்காமல், தமது தீர்மானத்தை மீறும் இறைச்சிக் கடை களை இழுத்து மூடுவதற்கு முதல்வர் தயாராக இருந்தார். அதற்காக 06ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை வேளையில் பொலிஸ் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் சகிதம் முதல்வர் கள விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது. ஆனால் வியாபாரம் நடத்தாமல் கடைகளை அவர்களாகவே மூடியிருந்தமை முதல் வெற்றியாகும் என கல்முனை மாநகர சபை விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை எனும் கதையை பக்குவமாக எடுத்துரைத்தது.

இவைகளெல்லாம் இப்படி இருக்க இந்த விடயம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை (09) கல்முனை முதல்வரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபை கணக்காளர் எம்.எம்.ரியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட இறைச்சிக் கடைக்காரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களை மேற்கொண்டதுடன் 01 கிலோ மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1700 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1900 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது. இதன்மூலம் கல்முனை முதல்வரின் ஆளுமை வெளிப்படையாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கல்முனையை ஆளும் தரப்பு மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர். அமீர் “நாங்க சும்மா பகடிக்கி சொல்றதையெல்லாம் நீங்க நம்புறானா- நாங்க எவ்வளவோ தீர்மானங்களை எடுத்திரிக்கின்றோம் ஏதாவது நடந்திரிக்கா” என தனது சமூக வலைத்தள பக்கத்தில் இதுதொடர்பில் பகிரங்கமாகவே கிண்டல் செய்துள்ளார்.

**இறைச்சி வியாபாரத்தில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள்**

பொதுமக்கள் பொறுமையுடன் ஒத்துழைப்பு வழங்கினால் இறைச்சிக் கடைக்காரர்களை வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என கல்முனை மாநகர சபை நம்புவதாக தெரிவிக்கப்படுவதுடன் 01 கிலோ மாட்டிறைச்சி 1600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். அதில் ஆகக்கூடியது 200 கிராம் மாத்திரமே எலும்பு அடங்கியிருத்தல் வேண்டும், தனி இறைச்சியாயின் 01 கிலோ கிராம்- 1800 ரூபாவுக்கே விற்கப்பட வேண்டும், அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் என மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 272 (8)(பப) இன் பிரகாரம் மாநகர முதல்வருக்கு உரித்தான அதிகாரத்தின் கீழ் இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(09ஆம் பக்கம் பார்க்க)



எஸ். ராமன்

# திகைத்து நிற்கும் அமெரிக்கா!



அண்மைக்காலத்தில், நம்மையும் அறியாமலேயே, நம் அன்றாட பொருளாதார பட்ஜெட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தொடர் விரிசல்களுக்கான காரணங்களை புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். இந்த புரிதலுக்கு, உலக பொருளாதார நிகழ்வுகளுக்கான ‘டைம் மெஷி’னை நாம் சற்று பின்னோக்கி நகர்த்த வேண்டும்.

கடந்த சில வருடங்களாக, உலகம் சில அசாதாரண நிகழ்வுகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அவற்றில் முதல் இடம் வகித்து, உலக பொருளாதாரத்தின் அடித்தளத்தை அசைத்து, அதன் சீரான அசைவுகளை ஸ்தம்பிக்க வைத்தது கொரோனா கொள்ளை நோய்த்தொற்று ஆகும்.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உலகை பீடித்த தீவிர கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் பிறந்து வளர்ந்த பொருளாதார நலிவுகளால் ஏற்பட்ட மந்தநிலைக்கு முட்டுக் கொடுக்க, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலை நாடுகள், பெரும் அளவிலான பொருளாதார ஊக்க நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தின. மந்தநிலையின் ஓர் முக்கிய பக்க விளைவான, சுணக்கம் என்ற நிலைக்கு பொருளாதார முள், பின்னோக்கி நகர்ந்து விடாமல் தடுக்கும் இடைக்கால மருந்தாக அந்த நடவடிக்கைகள் கருதப்பட்டன.

தங்கள் நாட்டு பொருளாதாரத்திற்கு வலுவூட்ட, அவற்றை மிக பிரமாண்டமான அளவில் மேற்கொண்டது அமெரிக்காதான். கொரோனா நோய்த்தொற்றால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்ட அமெரிக்காவில், சுமார் 30 லட்சம் கோடி டாலர் அளவிலான பொருளாதார ஊக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக, சந்தையிலிருந்து பெருமளவில் கடன் பத்திரங்கள் வாங்கப்பட்டு, அவற்றின் கொள்முதல் விலைக்கு ஈடான பெரும் தொகை புழக்கத்தில் விடப்பட்டது. இது முழுக்க முழுக்க செயற்கைப் பணமாகும்.

நாணயத்தை அச்சடித்துப் புழக்கத்தில் விடுவதற்குத் தேவையான அடிப்படை ஆதாரமற்ற செயற்கைப் பணத்தை உள்ளடைத்த பொருளாதார பலூனை அமெரிக்கா காற்றில் பறக்க விட்ட தருணம் என்று இதைக் கூறலாம். அந்த பலூன், உலகம் முழுவதும் பறந்து பறந்து பண மழையைத் தூவியது.

இதன் தொடர்ச்சியாக, கடன்களுக்கான வட்டி விகிதம், ‘பூஜ்ய’ நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. அமெரிக்காவின் வட்டி விகிதம் ‘பூஜ்ய’ நிலையில் இருந்ததால், அதிக வருவாய் ஈட்டக்கூடிய, வளர்ந்து வரும் நாடுகளின் பங்கு சந்தை போன்ற சொத்து மையங்களில், முதலீடுகள் பெருமளவு அதிகரித்தன. அடிப்படை ஆதாரம் இன்றி தோன்றிய பண மழை, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில், பணப்புழக்கத்தை அதிகரித்தது.

இந்த காலகட்டத்தில், மூலப் பொருள்களுக்கான உற்பத்தித் தட்டுப்பாடு, விநியோகத் தட்டுப்பாடு இவற்றால் கேட்புக்கும் தேவைக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்து வந்தது.

2021-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், தடுப்பூசிகளின் வரவால், தொற்றுப் பரவல் குறைந்து, பொருளாதாரம் மீண்டு எழுந்த நிலையில், பொருளாதார ஊக்க நடவடிக்கை களால், பல மடங்கு அதிகரித்த பணப் புழக்கம், பணவீக்கம் என்ற இடியை, இந்தியா உள்பட, உலகின் பல பகுதிகளில் படிப்படியாக இறக்குமதி செய்யத் தொடங்கியது.

உலகின் பல்வேறு பகுதிகளில் அந்த இடியின் தாக்கம் வெவ்வேறு விகிதங்களில் தோன்ற ஆரம்பித்தாலும், தனக்கு வரம் கொடுத்த பரமேஸ்வரன் தலையிலேயே கை வைத்து சோதித்து பார்க்க முற்பட்ட பஸ்மாசுரன் கதை போல, பணவீக்கம், கடந்த 40 வருடங்களில் இல்லாத அளவான, 9 சதவீதத்தைத் தாண்டி, அமெரிக்காவில் அது பெருத்த முழக்கமாக உருவெடுத்தது எனலாம்.

அமெரிக்காவால் தோற்றுவிக்கப்பட்ட ஊக்க பொருளாதார நடவடிக்கைகளின் பக்க விளைவுகளால் ஏற்பட்ட தாக்கத்தை உணர தொடங்கியவுடன், அமெரிக்க மத்திய வங்கி, தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க ஆரம்பித்தது. தற்காப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக, பூஜ்ய நிலையிலிருந்த வட்டி விகிதத்தை, அமெரிக்க மத்திய வங்கி, கடந்த மார்ச் முதல் ஜூலை வரை நான்கு முறை உயர்த்தியதோடு நிற்காமல், ‘இது முடிவல்ல, ஆரம்பம்தான், இது மேலும் தொடரும்’ என்றும் கோடிட்டுக் காட்டி இருக்கிறது.

அமெரிக்க வட்டி விகித உயர்வால், வளரும் நாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த மூலதனங்கள், படிப்படியாக வெளியேற ஆரம்பித்திருக்கின்றன. உதாரணமாக, கடந்த ஏழு மாதங்களில், இந்திய பங்கு சந்தையிலிருந்து சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் அளவிலான அந்நிய முதலீடுகள் வெளியேறி இருப்பதாக, நம்பத்தகுந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எரியும் தீயில் எண்ணெய்யை இட்டது போல், ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையே உருவான போர்சூழல், அந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் வரவை குறைத்து, அவை சார்ந்த விலை ஏற்றத்திற்கு வித்திட்டு, நம் நாட்டின் பணவீக்கத்தை 8 சதவீத அளவுக்கு உயர்த்தியது.

ஏற்கெனவே உயர்த்தப்பட்ட பெற்றோல், டீசல் விலைகள் மேலும் உயராமல் இருப்பதற்கு, அணி சாராத நம் வெளிநாட்டு கொள்கை கை கொடுத்தது என்று கூறலாம். இந்த கொள்கையால், ரஷ்யாவிலிருந்து, ஓரளவு நியாய விலைக்கு எரிபொருள்களை இறக்குமதி செய்ய முடிகிறது. மேலும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறையும்போது, அந்த பலன், பொதுமக்களை சென்றடைய வேண்டும்.

சாமானிய மக்கள், கொரோனா காலத்தின் பெரும் பாதிப்புகளிலிருந்து மீண்டு எழுந்து வருவதற்கு தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அவர்கள் அன்றாடும் பயன்படுத்தும் பொருள்களின் மீதான வரியை அதிகரிக்கும் நடவடிக்கைகளை, மத்திய - மாநில அரசுகள் ஒத்திப்போடுவது மிக அவசியம்.

தன் பண ஊக்க நடவடிக்கைகள் மூலம், உலக நாடுகளின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு வித்திட்ட அமெரிக்கா, தற்போது செய்வது அறியாமல், திகைத்து நிற்கிறது. வட்டி விகித உயர்வால், அந்த நாட்டின் ஜி.டி.பி. கீழ்நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து விட்டது.

இதன் விளைவாக, ஆரேக்கிள், வால்மார்ட், ஓலா, நெட்ஃப்ளிக்ஸ் போன்ற நிறுவனங்கள், செலவுகளைக் கட்டுப்படுத்த, ஆள் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நாள்தோறும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

உலக நாடுகளின் பொருளாதார ஸ்திரத்தன்மை, அமெரிக்க பொருளாதாரத்தை சார்ந்திருப்பது நிதர்சனமான உண்மை. தன்னால் பறக்கவிடப்பட்ட செயற்கை பண வாயு பலூனில் துளையிட்டு, விபத்துகள் அதிகமின்றி, அதை லாகவமாக கீழே இறக்க அமெரிக்கா தற்போது முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

அந்த தரை இறக்கத்தினால் ஏற்படப்போகும் பக்க விளைவுகள், இந்தியா உள்ளிட்ட மற்ற நாடுகளின் பொருளாதாரத்தில் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, தற்போதைய 576 பில்லியன் டாலர் அந்நிய நாணய கையிருப்புடன், பொருளாதார வலிமை தரவரிசைப் பட்டியலில் ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. இந்த வலிமையுடன், காத்திருக்கும் பொருளாதார தாக்குதல்களை, அதிக பாதிப்புகள் இன்றி எதிர்கொள்வோம் என்கிற நம்பிக்கையை வளர்ப்போம்!

சோதனை மிகுந்த இன்றைய காலகட்டத்தில், அரசியல்வாதிகள் தங்கள் சுயநலப் போக்கை மறந்து, சட்டப்பேரவையிலும், நாடாளுமன்ற அவைகளிலும் மக்கள் வரிப் பணத்தை வீணடிக்கும் அமளி துமளிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, மக்கள் நலனை மையமிட்டு, தங்கள் பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என்பதுதான் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் வேண்டுகோளும் ஆகும்!

(கட்டுரையாளர் : வங்கி அதிகாரி (ஓய்வு).

(தினமணி)

# அம்பாறை மாவட்டத்தில்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட இத்தீர்மானங்களில் எவ்வித விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. இதனை அமுல்படுத்துகின்ற விடயத்தில் மாநகர முதல்வர் மிகவும் உறுதியுடன் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று அறிவிக்கப்பட்டு பின்னர் அதில் தளர்வை கல்முனை முதல்வரே மேற்கொண்டுள்ளார்.

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லையினுள் நிர்ணய விலைகளிலேயே மாட்டிறைச்சி விற்கப்படுவதை அப்பகுதி வியாபாரிகள் அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அதேவேளை, அட்டாளைச்சேனையில் இவ்விலையை நடைமுறைப்படுத்த அங்குள்ள மாட்டிறைச்சி வியாபாரிகள் தவறியமையால், அப்பிரதேச சபை சபைத் தவிசாளரினால் அப்பகுதி விலங்கறுமனை இழுத்து மூடப்பட்டிருக்கிறது. ஆனாலும் துரதிஷ்டவசமாக இழுத்து மூட மாநகர சபைக்கு சொந்தமான விலங்கறுமனையோ மாநகர சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடைகளோ கல்முனையில் இல்லை என்பதே இங்கு கவலையான விடயமாக உள்ளதுடன் கல்முனை மாநகர இறைச்சிக்கடைக்காரர்கள் தமது எண்ணம் போலவே இதுவரையும் வியாபாரம் செய்து வருகின்றனர்.

### அக்கரைப்பற்றில் நடக்கும் இறைச்சி வியாபாரம்

அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குள் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த விமர்சனங்களை கருத்தில் கொண்டு, மாட்டிறைச்சி விற்பனையாளர்களுடனான சந்திப்பொன்று அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சகி தலைமையில் மாநகர சபையில் இடம் பெற்றது. இதில் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த குற்றச்சாட்டை விற்பனையாளர்கள் முற்றாக மறுத்தனர். இருந்தாலும் , ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்க வாய்பிருக்கலாம் என்பதையும் , பொருளாதார நெருக்கடி நிலையையும் கருத்தில் கொண்டு மாநகர மக்களின் நலனுக்காக தொடர்ந்தும் மாநகர சபை இவ்விடயத்தில் மிகவும் கண்காணிப்புடன் நடந்து கொள்ளும் என்பதை மாநகர மக்களுக்கு அக்கரைப்பற்று மாநகர சபை தெரிவித்திருந்தது.

### பிரதேச சபைகள் என்ன செய்கிறது

அம்பாறை மாவட்ட காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி, பொத்துவில் போன்ற பிரதேச சபைகளிலும் இந்த மாட்டிறைச்சிக்கான நிர்ணய விலை இல்லாத பிரச்சினை தொடர்கிறது. மாட்டிறைச்சி விலையில் மாநகர சபைகளினால் மாற்றம் கொண்டுவர முடியுமானால் அதேபோன்று ஏனைய மாவட்டங்களிலுள்ள பிரதேச சபைகளினால் மாற்றங்கள் கொண்டு வந்து குறைந்த விலைகளில் மாட்டிறைச்சி விற்கப்படும் போது ஏன் அம்பாறை மாவட்ட பிரதேச சபைகளின் பிரதேசத்தில் மாத்திரம் கண்முடித்தனமாக இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது ஏன் இதுவரை பிரதேச சபைகள் கவனம் கொள்ளாமல் இருப்பதன் காரணம் என்ன? இனியாவது பிரதேச சபைகள் இதனை கவனம் கொள்ளுமா? எனும் கேள்விகள் பரவலாக எழ ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில் அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் பிரதேச சபைகள் பலகட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் மாட்டிறைச்சி விலையில் ஒரு நிர்ணயத்தை முன்மொழிந்துள்ளது. அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை மீறி, அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்தால் கொல்களத்தை மூடுவதாக தவிசாளர் தெரிவித்துள்ளதுடன்

ஒரு கிலோ மாட்டிறைச்சியை 1600 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக மாட்டிறைச்சிக் கடைக்காரர்கள் உத்தரவாதமளித்தால் மட்டுமே, மாடறுக்கும் இடம் திறந்து கொடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இப்படியான உடும்புப்பிடி அறிவிப்புக்களின் உறுதிப்பாடும், மாநகர சபைகளினதும் பிரதேச சபைகளினதும் முன்மொழிவுகளின் சாத்தியப்பாடுகளும் நீண்ட காலத்திற்கு நிலைக்குமா என்பதை காலமே கூற வேண்டும்.

●

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.




03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**13.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**13.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## சிறுபோக நெல் அறுவடை துரிதம்

மட்டக்களப்பு, ஒக. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2022 சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் தற்போது துரிதமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் உள்ள 16 கமநல சேவை கேந்திர நிலையப் பிரிவுகளில் சுமார் 32,260 ஹெக்டேயரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் கே.ஜெகன்நாத் தெரிவித்தார்.

அறுவடைக் காலம் தொடங்கியுள்ளபோதிலும் அறுவடைக்குத் தேவையான எரிபொருளை அரசாங்கம் பெற்றுக் கொடுத்ததனால் குறித்த வேளைக்கு தமது நெல்லை அறுவடை செய்வதற்கு வசதி கிட்டியதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, எதிர்வரும் பெரும்போக நெல் செய்கையின்போது தேவையான யூரியா உட்பட சகல வசதிகளையும் பெற்றுத் தருவதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சிறுவன்மீது தாக்குதல் ஆசிரியை கைதானார்!

## அதிபர் தலைமறைவு



மட்டக்களப்பு, ஒக. 13

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்றுவரும் சிறுவனை தாக்கியதையடுத்து அவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், ஆசிரியை ஒருவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், அந்த பாடசாலையில் அதிபர் தலைமறைவாகியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலையில் கல்வி கற்றுவரும் 10 வயது சிறுவன் சம்பவ தினமான 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு சென்றுள்ள நிலையில் பாடசாலைக்கு அருகிலுள்ள கடை ஒன்றிற்கு பாடசாலை இடைவேளை நேரத்தில் சென்று சாப்பிடுவதற்கான பொருட்களை வாங்கி வந்துள்ளான்.

குறித்த சிறுவனை அதிபர் கண்டு வரவழைத்து இந்த சாப்பாடு பொருட்களை வாங்க எங்கிருந்து பணம் வந்தது எனக் கேட்டு கேட்டு 3 பிரம்புகளை ஒன்றிணைத்து சிறுவனை தாக்கியுள்ளார்.

வீடு சென்ற சிறுவனின் உடலில் தழும்புகள் இருப்பதைக் கண்டு பெற்றோர் அவனிடம் விசாரித்தனர். தன்னை அதிபர் அடித்துள்ளதாக அவன் தெரிவித்துள்ளான்.

இதனையடுத்து காயமடைந்த குறித்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு தெரிவித்ததையடுத்து சிறுவனை அடிக்க உடந்தையாக இருந்த ஆசிரியையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிபர் தலைமறைவாகியுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட ஆசிரியையை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முஸம்மில் மொஹிதீனை கிழக்கு ஆளுநர் ஆக்குக!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஒக. 13

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சியான தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் முஸம்மில் மொஹிதீனை, கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்குமாறு, கிழக்கிலுள்ள சில சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநராக தமிழ் பேசுகின்ற ஒருவரையே நியமிக்கவேண்டுமெனவும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக அவர் இருக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் கட்சியின் தலைவர், இன, மத பேதமற்ற ஒருவராகவும் உள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸம்மில் மொஹிதீன் கடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டதோடு, கிழக்கு மாகாணத்துக்கு பொருத்தமான நபராக தாம் இவரை நோக்குவதாகவும் குறித்த சிவில் அமைப்புக்கள் இணைந்து ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளன. (அ)



## பாடசாலை மாணவ தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிப் பாசறை

கல்முனை, ஒக. 13

கல்முனை கல்வி வலய உவெஸ்லி உயர்தர பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி பாசறை நேற்று முன் தினம் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் .எஸ். கலையரசன் தலைமையில் பாடசாலையின் உப அதிபரும், ஒழுக்காற்றுக் குழுவின் செயலாளருமான ஜீ. அல்பரட் கரன் ஆசிரியரின் நெறிப்படுத்தலின் கீழ் மிகவும் சிறப்பாக இந்த பயிற்சிப் பாசறை இடம்பெற்றது. (அ)

# மூதூரில் போராட்டம்




திருமலை, ஒக. 13

“வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 11ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம், மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தப் போராட்டத்தில் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், கிராமிய பெண்கள் குழுக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

‘வட, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்”, “நடமாடும் சுதந்திரம் எங்கள் உரிமை”, “கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை” மற்றும் “மதத்தை பின்பற்றுவது எங்கள் உரிமை” உள்ளிட்ட பல வாசகங்களை போராட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர். (அ)

## மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு புதிய அத்தியட்சகர் நியமனம்

மட்டக்களப்பு, ஒக. 13

மட்டக்களப்பு சிறைச்சாலை வரலாற்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில், இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல்.விஜயசேகர இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிராகரன் நியமிக்கப்பட்டுள்ளார்

2017ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றிய இவர், அதே ஆண்டில் சுப்றா தரத்தில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்று, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றியுள்ளார்.

அதன் பின்னர் சிரேஷ்ட தரத்தைச் சேர்ந்த இவர் 2020 ஆண்டு இலங்கையில் பெரிய சிறைச்சாலையான தும்பறை மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிய பின்னர் 2021இல் வவுனியா சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிவந்த நிலையில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் பெருவெற்றி

## வடகொரியா அறிவிப்பு



பியொங்யாங், ஓக. 13

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு எதிரான போரில் வட கொரியா வெற்றி பெற்றுள்ளதாக அந் நாட்டு தலைவர் கிம் ஜோங் உன் அறிவித்துள்ளார்.

இதையடுத்து கடந்த மே மாதத்தில் விதிக்கப்பட்ட கடுமையான தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக் கைகளை நீக்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிம் ஜோங் உன் உத்தரவிட்டதாக அந்நாட்டு அரச ஊடகங் கள் தெரிவித்துள்ளன.

வட கொரியா இதுவரை எத்தனை கொரோனா தொற்று நோயாளிகளை உறுதிப்படுத்தியது என்பது குறித்த தகவல்கள் வெளிப்படுத்தவில்லை. ஆனால் ஜூலை 29 முதல் புதிய சந்தேகத்திற்கிடமான தொற்று நோய்கள் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை என வடகொரியா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா நோய்த்தொற்றிலிருந்து வட கொரியா முற்றிலுமாக விடுபட்டுவிட்டது. கிம் ஜோங்-உன்னின் வழிகாட்டுதலின் பேரில் இந்த அதிசயம் நடந்துள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ளும் போது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது என கிம்-ஜோங் உன்னின் சகோதரி கிம் ஜோ ஜோங் அறிவித்துள்ளார்.


வட கொரியாவில் கொரோனா பரவியதற்கு தென் கொரியாவே காரணம். எல்லைக்கு அப்பாலிருந்து பலூன்கள் மூலம் ரூபாய் நோட்டுகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்களை அனுப்பி, அதன் வழியாக தென் கொரியா கொரோனாவை பரப்பியது. இதற்கு மிகக் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகம் முழுவதையும் கொரோனா ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தபோதே, தங்கள் நாட்டில் மட்டும் கொரோனா பரவல் இல்லை என்று வட கொரியா கூறியதை பெரும்பாலான நிபுணர்கள் நம்பவில்லை. அது போல், தங்கள் நாட்டில் கொரோனா பரவி வருவதாக அண்மையில் ஒப்புக் கொண்ட வட கொரியா, அது தொடர்பாக வெளியிட்டு வந்த புள்ளிவிவரங்களும் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக இல்லை என்று பலர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், கொரோனாவிலிருந்து தாங்கள் முழுமையாக விடுபட்டுவிட்டதாக வட கொரியா தெரிவித்துள்ளது. (அ)

# துரித தடுப்பு நடவடிக்கை இல்லையேல் குரங்கம்மை இன்னும் வேகமாக பரவும்!

## அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளுக்கு அதிக ஆபத்து



பாரிஸ், ஓக. 13

குரங்கம்மை நோய்த் தொற்று பரவலைத் தடுக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் இந்த நோய்த் தொற்று வழக்கமாக காணப்படாத பிராந்தியங்களில் குறிப்பாக அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளில் இன்னும் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போதைய நிலையில், 75 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 26,000 இற்கும் அதிகமானோர் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோயால் பாதிக்கப்பட்ட 5 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

நோய்த் தொற்று வேகமாக பரவி வருவதைத் தொடர்ந்து, கடந்த மாதம் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் அவசரக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், குரங்கம்மை பாதிப்பு சர்வதேச சுகாதார நெருக்கடியாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த நோய்த் தொற்று பரவலை ஆய்வு செய்த நிபுணர்கள், குரங்கு அம்மை பாதிப்பு, வழக்கத்துக்கு மாறாக இதுவரை பாதிப்பு ஏற்படாத பகுதிகளில் பரவியிருப்பதைக் கண்டறிந்துள்ளனர். அதாவது, முந்தைய குரங்கு அம்மை பாதிப்புகள் பெரும்பாலும் மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளை அடிப்படையாகக் கொண்டு பரவிய நிலையில், தற்போது அந்த நிலை மாறியிருப்பதோடு, பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்து பரவும் நிலை மாறி மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் தொற்றாகவும் மாறியுள்ளது.

குரங்கம்மை பாதிப்பு கவலைக்குரிய நோய்த் தொற்றாக மாறியிருப்பதற்கான காரணத்தையும் நிபுணர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

அதில் முதலாவதாக, இந்த நோய்த் தொற்று மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவக் கூடிய நோயாக மாறியுள்ளது. பாதிக்கப்பட்ட நபருடன் நெருக்கமான தொடர்பில் இருப்பது அல்லது பாதிக்கப்பட்ட நபரின் வியர்வை, சளி ஆகியவை படுவதாலும், பாதிக்கப்பட்ட நபரின் ஆடைகள் அல்லது படுக்கை விரிப்பை பகிர்ந்து கொள்வதாலும் நோய்த் தொற்று பரவ வாய்ப்புள்ளது.

தற்போதைய பாதிப்பின் பின்னணியில் குரங்கம்மை எந்த அளவுக்கு பரவுகிறது என்பது இன்னும் தெளிவாகக் கண்டறியப்படவில்லை என்றபோதும், பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பில் இருப்பதன் மூலமாக 50 சதவீதம் பரவ வாய்ப்புள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

அடுத்ததாக, இது குறிப்பிட்ட பிரிவினரிடையே, அதாவது பெரும்பாலும் ஆண்களுடன் உடலுறவு வைத்திருக்கும் ஆண்கள் மத்தியில் இந்த நோய்த் தொற்று பரவுகிறது. தற்போதைய நிலையில் 98 சதவீத குரங்கு அம்மை பாதிப்பு இந்தப் பிரிவினரிடையேதான் காணப்படுகிறது.

எனினும் அதுபோன்ற பாலியல் உறவு இல்லாதவர்களுக்கும் இந்த தொற்று ஏற்படலாம். ஆனால், பாலியல் தொடர்பு மற்றும் பாலியல் ரீதியிலான பரவல், எந்த அளவுக்கு இந்த நோய்த் தொற்று வேகமாக பரவுவதற்கு காரணமாக அமையும் என்பது கவலைக்குரிய விடயமாக உள்ளது.

முக்கியமாக, விந்தணுவிலும் இந்த நோய்த் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், அதன் மூலமாக தொற்று நோயாக பரவியதா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இருந்தபோதும், பாதுகாப்பற்ற முறையில் பாலியல் உறவு கொள்வது தொற்று பரவலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகிறது. அதே நேரம், பரவல் முறையை உறுதிப்படுத்த மேலும் சில ஆதாரங்கள் தேவைப்படுகின்றன என சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர்களை தனிமைப்படுத்துதல், பரவல் தொடர்பை கண்டறிதல், உயர் பாதிப்புள்ள நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துதல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளே தற்போது குரங்கம்மை பாதிப்புக்கான சுகாதார நடவடிக்கைகளாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஐரோப்பிய நதிகள் வற்றுகின்றன!

பாரிஸ், ஓக. 13

அரசியல், யுத்தங்கள் தாண்டி சூழலும் பருவநிலையும் செய்திகளில் முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் கடும் வரட்சியும் காட்டுத் தீயும் மனித குலத்துக்குப் பல புதிய எச்சரிக்கைகளைச் சொல்வதுபோலப்படுகிறது. நதிகள் இதுவரை காணாத மட்டங்களுக்கு வற்றி வருகின்றன. லண்டன் தேம்ஸ் நதியின் ஊற்றிடம் நிரந்தரமாக வரண்டு கிடப்பதாக வெளியான பிந்திய தகவல்கள் ஆச்சரியமளிக்கின்றன.

லண்டனை ஊடறுத்துச் செல்லும் தேம்ஸ் நதியின் தொடக்க இடம் அல்லது ஊற்றிடம் என்று கருதப்படும் குளோசெஸ்டர்ஷயர் பகுதி மிக மோசமாக வரண்டு தரிசு நிலமாகக் காட்சியளிக்கிறது. பொதுவாகக் கோடை காலத்தில் நீர் வற்றுவது வழக்கம் என்றாலும் இந்தத் தடவை அது நீர் இருந்ததற்கான எந்தவித அடையாளங்களும் இன்றி வரண்டு ஆபிரிக்காவின் சவன்னா போலக் கிடப்பது பருவநிலை மாறுதலின் ஒரு துர்க்குறி என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் இரண்டாவது நீண்ட நதியாகிய தேம்ஸ் 215 மைல்கள் நீளமுடையது. தெற்கு இங்கிலாந்தில் லண்டனை ஊடறுத்து வட கடலில் சென்று முடிவடைகிறது. அது தரையில் தொடங்கும் இடம் அல்லது அதன் பாரம்பரிய ஊற்றுக்கண் எழுகின்ற பகுதி, வேல்ஸ் அருகே குளோசெஸ்டர்ஷெயர் பிரிவில் கோட்ஸ் வோல்ட்ஸ் என்ற இடத்தில் ஒரு கிராமத்தில் அமைந்துள்ளது. அங்குள்ள சுண்ணாம்புக் கற்பாறை நிலத்தில் இருந்தே தேம்ஸ் ஊற்றெடுத்துப் பாய்கிறது. மழை மற்றும் பனிக் காலங்களை அடுத்தே அங்கு அந்தப் பருவ கால ஊற்றுக்களில் ஆற்று நீர் வெளிப்படுகிறது. ஆனால் தற்சமயம் அந்த ஊற்றுப்பகுதியில் இருந்து சுமார் ஐந்து மைல்கள் நீளமான நதியின் தொடக்கப் பகுதி வரண்டு காட்சியளிக்கிறது. அது வழமைக்கு மாறானது என்று லண்டன் நதி நம்பிக்கை நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.



கோடையில் குறுகிய காலத்துக்கு மட்டுமே அங்கு நீர் குறைந்து காணப்படுவது வழக்கம் என்றாலும் இப்போது நிலம் முழுவதுமாக வரண்டு - நீர்த்தன்மை இழந்து - நீர்வாழ் உயிரினங்களது தடயம் எதுவும் இன்றிய தரிசு நிலம் போலக் காட்சியளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலங்களில் மழை மற்றும் பனி வீழ்ச்சி குறைந்தமையும், கடந்த சில வாரங்களாக நீடிக்கின்ற கடும் வெப்பமுமே நதி நீரை அடியோடு வற்றச் செய்துள்ளன என்றும் அதன் ஊற்றிடத்துக்கு அப்பால் நதி செல்லும் வழி எங்கும் நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை அதன் கோடைகால வெப்ப வரலாற்றில் 1934 ஆம் ஆண்டுக்குப் பிறகு கடந்த ஜூலை மாதமே மிக மோசமான அதிக வெப்பநிலை பதிவாகியிருக்கிறது என்று தரவுகள் வெளியாகியுள்ளன.

லண்டன் நகரம் உட்பட பல பகுதிகளிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (அ)

# சீனாவில் 'லாங்யா' புதிய வைரஸ் பரவல்!

## மூஞ்சூறு எலிகள் மூலம் மனிதருக்குப் பரவியதா?

பீஜிங், ஓக. 13

சீனாவின் கிழக்குப் பகுதியில் விலங்குகள் மூலம் பரவுகின்ற புதிய வைரஸ் ஒன்றை நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். மூஞ்சூறு எலிகள் மூலம் தொற்றியிருக்கலாம் என நம்பப்படுகின்ற அந்த வைரஸ் இதுவரை 35 பேருக்கு பரவியுள்ளது.

ஆனால் அது மனிதர்களில் இருந்து மனிதருக்குப் பரவக் கூடியதா என்பது உறுதிசெய்யப்படவில்லை. லாங்யா ஹெனிபவைரஸ் அல்லது சுருக்கமாக 'லேவி' என்று அழைக்கப்படுகின்ற அது, ஏற்கனவே கண்டறியப்பட்ட கொடிய 'நிபா' மற்றும்"ஹெண்ட்ரா" குடும்பத்தைச் சேர்ந்தது என்பதை நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர். லேவி வைரஸ் தொடர்பான ஆய்வு முடிவுகள் 'புதிய இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகை' இதழில் வெளியாகியுள்ளன.

கிழக்கு சீனாவில் தொற்றுக்குள்ளானவர்களில் பலர் விலங்குகளோடு நெருக்கமாக வசிக்கின்ற விவசாயிகள் என்றும் சோர்வு, இருமல், பசியின்மை போன்ற பொதுவான அறிகுறிகளும் இரத்த அணுக் குறைபாடு, கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு போன்ற தீவிரமான அறிகுறிகளும் அவர்களிடையே அவதானிக்கப்பட்டுள்ளது. எவருமே அதனால் உயிரிழக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனா, சிங்கப்பூர் மற்றும் ஆஸ்தி ரேலிய தொற்றுநோய் மற்றும் வைரஸ் நோயியலாளர்கள் புதிய லாங்யா வைரஸ் குறித்துப் பதற்றம் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது - என்று தெரிவித்துள்ளனர். மனிதரிடையே பெரும் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய பெருந் தொற்று நோயாகப் பரவக் கூடிய வீரியம் கொண்டது அல்ல என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆராய்ச்சியாளர்கள் இந்த வைரஸ் முக்கியமாக மூஞ்சூறு என்கின்ற எலி வகைகளில் இருந்தே பரவுகிறது என்பதைக் கண்டறிந்துள்ளனர். நாய்கள், ஆடுகளிலும் அவை பரிசோதிக்கப்பட்டுள்ளன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் தொடங்கியதாக நம்பப்படும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோய் உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்து அடங்கியுள்ளதால் இன்னுமொரு புதிய வைரஸ் பற்றிய சீனாவின் இந்தச் செய்தியை உலக ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கின்றன.

புதிய 'லேவி' வைரஸ் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக தைவான் நாட்டு தொற்றுநோய்கள் தடுப்பு நிலையம் தெரிவித்திருக்கிறது. (அ)

# 100 பந்துகள் கிரிக்கெட்டில் முதல் சதம் அடித்தார் வில்!

எட்ஜ்பாஸ்டன், ஒக. 13

'100 பந்து' கிரிக்கெட்டில் சதம் விளாசிய முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் 20 வயதான இளம் வீரர் வில் ஸ்மித். 49 பந்துகளில் இந்த சதத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

கிரிக்கெட் உலகில் மற்றொரு வடிவ கிரிக்கெட்டாக அறியப்படுகிறது 'நூறு பந்து' கிரிக்கெட். இதன் பெயரை போலவே ஒவ்வொரு அணியும் தலா 100 பந்துகள் (இனிங்ஸ்) மட்டுமே ஒரு போட்டியில் விளையாடும். இது இங்கிலாந்து நாட்டில் கடந்த ஆண்டு இந்தத் தொடர் அறிமுகமானது.

தற்போது நடைபெற்று வரும் 'நூறு பந்து" இரண்டாவது தொடரில்தான் சதம் விளாசியுள்ளார் வில். இதுதான் இந்த வடிவ கிரிக்கெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் சதம். பர்மிங்ஹாம் பீனிக்ஸ் அணிக்காக அவர் விளையாடி வருகிறார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற சௌதேர்ன் பிரேவ் அணிக்கு எதிரான போட்டியில் அவர் இந்த சதத்தை பதிவு செய்தார்.



50 பந்துகளை எதிர்கொண்ட அவர் மொத்தம் 101 ஓட்டங்களை விளாசினார். இதில் 8 பௌண்ட்ரிகள் மற்றும் 6 சிக்ஸர்கள் அடங்கும். அவர் இந்தப் போட்டியில் ஆட்டநாயகன் விருதையும் வென்றுள்ளார்.



# 600 விக்கெட்கள் வீழ்த்தி பிராவோ புதிய சாதனை!

லண்டன், ஒக. 13

இருபது -20 கிரிக்கெட்டில் 600 விக்கெட்களைக் கைப்பற்றிய முதல் பந்துவீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் மேற்கிந்திய தீவுகளை சேர்ந்த சகலதுறை வீரர் பிராவோ. ஐ. பி. எல். அரங்கில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார் அவர்.

38 வயதான அவர் இருபது - 20 கிரிக்கெட்டில் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் விளையாடி வருகிறார். உலகம் முழுவதும் நடைபெறும் இருபது -20 லீக் தொடர்களில் சுமார் 25இற்கும் மேற்பட்ட அணிகளில் அவர் விளையாடி உள்ளார். இத்தகைய சூழலில்தான் இந்த வரலாற்றுச் சாதனையை அவர் படைத்துள்ளார்.

தனது 545ஆவது இருபது - 20 போட்டியில் 600 ஆவது விக்கெட்டை அவர் கைப்பற்றியுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணிக்காக சர்வதேச இருபது - 20 போட்டிகளில் 78 விக்கெட்களும், உலகம் முழுவதும் நடைபெறும் இருபது - 20 தொடர்களில் விளையாடி 522 விக்கெட்களையும் அவர் கைப்பற்றியுள்ளனர்.

தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் 'நூறு பந்துகள்' தொடரில் நொதேர்ன் சுப்பர் சார்ஜர்ஸ் அணிக்காக அவர் விளையாடி வருகிறார். ஓவல் அணிக்கு எதிரான போட்டியில் ரிலீ ரோசோவ் விக்கெட்டை எல். பி. டபிள்யூ. முறையில் கைப்பற்றினார் பிராவோ. அதுதான் அவரின் 600ஆவது இருபது - 20 விக்கெட்.

இருபது - 20 கிரிக்கெட்டில் அவரைத் தவிர வேறு எந்தவொரு பந்துவீச்சாளரும் 500 விக்கெட் என்ற மைல்கல்லைக்கூட இன்னும் தொடவில்லை. அவருக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் 466 விக்கெட்களுடன் அதிக விக்கெட்களை கைப்பற்றிய பந்துவீச்சாளராக ஆப்கானிஸ்தானை சேர்ந்த ரஷீத் கான் உள்ளார்.

# ஜாம்பவான்களின் கிரிக்கெட் கங்குலி தலைமையில் இந்தியா!



புதுடில்லி, ஒக. 13

மூத்த வீரர்கள் பங்கேற்கும் ஜாம்பவான்களின் தொடர் இந்த வருடம் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்காக கங்குலி தலைமையில் விளையாடும் இந்திய மகாராஜாஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடப் போட்டி இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின நிறைவு விழாவுக்கான அர்ப்பணிப்பாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரியில் ஓமனில் நடைபெற்ற முதல் பருவத்தில் லயன்ஸ் - ஜெயண்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான இறுதிச்சுற்றில் ஜெயண்ட்ஸ் அணி வெற்றி பெற்றது. 2-வது பருவத்தில் 4 அணிகள் பங்கேற்கின்றன. மொத்தமாக 15 போட்டிகள் நடக்கவுள்ளன.

இந்திய மூத்த வீரர்களின் அணி இந்திய மகாராஜாஸ் என்று அழைக்கப்படுகிறது. கங்குலி தலைமையிலான மகாராஜாஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 16 அன்று ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இந்திய மகாராஜாஸ் - இயன் மார்கன் தலைமையிலான உலக ஜெயண்ட்ஸ் அணிகள் மோதவுள்ளன.

கங்குலி தலைமையிலான இந்திய அணியில் சேவாக், யூசுப் பதான், இர்பான் பதான், ஸ்ரீசாந்த், ஹர்பஜன் சிங், அஜய் ஜடேஜா போன்ற பிரபல வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

அணி விவரம்: கங்குலி (அணித் தலைவர்), சேவாக், முகமது கைப், யூசுப் பதான், பத்ரிநாத், இர்பான் பதான், பார்திவ் பட்டேல் (விக்கெட் காப்பாளர்), ஸ்டுவர்ட் பின்னி, ஸ்ரீசாந்த், ஹர்பஜன் சிங், நமன் ஓஜா (விக்கெட் காப்பாளர்), அசோக் டிண்டா, பிரக்யன் ஓயா, அஜய் ஜடேஜா, ஆர். பி. சிங், ஜொகிந்தர் சர்மா, ரீதிந்தர் சிங் சோதி.



# 2023 மார்ச் மாதத்தில் பெண்கள் ஐ. பி. எல்.

புதுடில்லி, ஒக. 13

2023 மார்ச் மாதத்தில் மகளிர் ஐ. பி. எல். போட்டியைத் தொடங்க இந்திய கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். போட்டியின்போது மகளிர் இருபது - 20 சவால் ஆட்டங்கள் நடைபெறுவது வழக்கம். எனினும் இதர நாடுகளைப் போலவே இந்தியாவிலும் மகளிர் இருபது - 20 லீக் போட்டியை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன.

மகளிர் ஐ. பி. எல். போட்டியை அடுத்த வருடம் தொடங்குவது சரியாக இருக்கும். அது நிச்சயம் ஐ. பி. எல். போட்டியைப் போல பெரிய வெற்றியை அடையும் என்று கடந்த பெப்ரவரி மாதம் இந்திய கிரிக்கெட் சபை தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இந்நிலையில், 2023 மார்ச்சில் ஐ. பி. எல். போட்டியைத் தொடங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பொதுக்கூட்டத்தில் இதுகுறித்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்திய மகளிர் அணி சமீபத்தில் நடைபெற்ற பொதுநலவாய போட்டிகளில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறி வெள்ளிப் பதக்கம் வென்றது. இதனால் மகளிர் கிரிக்கெட் மீதான ஆர்வம் இந்திய ரசிகர்களிடையே மேலும் அதிகரித்துள்ளது.

# உலகக்கிண்ண உதைபந்தாட்டம் ஒருநாள் முன்னதாகவே ஆரம்பம்!

டோஹா, ஒக. 13

கட்டார் நாட்டில் வரும் நவம்பரில் தொடங்கவுள்ள பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் ஒருநாள் முன்கூட்டியே தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பல்வேறு தகவல்கள் உறுதி செய்துள்ளன.

இதன்படி பார்த்தால் நவம்பர் 21ஆம் திகதி தொடங்கவிருந்த முதல் சுற்று போட்டிகள் 20ஆம் திகதியே தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் சர்வதேச உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பு (பிபா), கட்டார் நாட்டில் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரை நடத்துகிறது. மொத்தம் 32 அணிகள் இதில், பங்கேற்று விளையாடுகின்றன. 8 பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

கட்டார் நாட்டில் உள்ள 8 மைதானங்களில்




போட்டிகள் நடைபெறுகிறது. உலகின் முன்னணி உதைபந்தாட்ட வீரர்கள் இதில் விளையாடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நவம்பர் 21ஆம் திகதி தொடங்கும் என சொல்லப்பட்ட இந்தத் தொடர் இப்போது 20ஆம் திகதியே தொடங்கும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

முதல் போட்டியில் தொடரை நடத்தும் கட்டார் அணி, ஈக்குவேடாரை எதிர்த்து விளையாடுகிறது. இந்தப் போட்டி 20ஆம் திகதி மாலை 07 மணியளவில் தொடங்கும் என சொல்லப்பட்டுள்ளது. மற்ற அனைத்துப் போட்டிகளும் முன்னர் திட்டமிட்டபடி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடரை நடத்தும் நிர்வாகத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 முதல் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் நாட்டின் அணி தொடக்க போட்டியில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து, இங்கிலாந்து, ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி, பெல்ஜியம், குரோஷியா, பிரேசில், போர்த்துக்கல் போன்ற அணிகள் இந்தத் தொடரில் விளையாடவுள்ளன. இத்தாலி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக உதைபந் தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் தகுதியை இழந்துள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி சுந்தரம்பிள்ளை புவனேஸ்வரி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 08 - 1939 | 08 - 08 -2022 |

யாழ். அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், ஜேர்மனி Bad Wildungen ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் 08.08.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா, செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவம், அன்னக்கிளி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரன் (ஜேர்மனி), இராஜேந்திரன் (சுவிஸ்), இராஜேஸ்வரி (அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் தியாகேஸ்வரி (சாவகச்சேரி), பரமேஸ்வரி (சாந்தி - நெதர்லாந்து), சுவேந்திரன் (சுவிஸ்), தனேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகௌரி (ஜேர்மனி), கணேசரூபி (சுவிஸ்), சிவபாதம் (அல்லைப்பிட்டி), சிவகுமார் (சாவகச்சேரி), சிவா (நெதர்லாந்து), மஞ்சுளா (சுவிஸ்), உமாநந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், காந்தலிங்கம், பாக்கியம், குலசிங்கம் (மாம்பழம்) மற்றும் செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், மகேஸ்வரி மற்றும் தெட்சணாமூர்த்தி (இலங்கை), காலஞ்சென்ற தில்லைநாயகி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், பாலச்சந்திரன் மற்றும் குணமணி (இலங்கை), காலஞ்சென்ற வாசுதேவன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், நிவேதா, மிதுலா, றுமேஸ், மிலானி, டெனோஷன், அஜந், கௌசிகா, விஸ்ணுதரன், யுகப்பிரியா, லாவண்யா, விவேக், வினோத், பிரதினா, புவி, தனுஷன், வேணு, பிரசாந், பிரதீப், தனுஷா, காண்டீபன், சிந்து, சிந்துஜன், அனோஜன், அபிலாஸ், அட்சயன், அபினாஸ், அபினா, அவனேஸ் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், நைலா, நிருஜன், நிஷானி, மோஜிகா, மாதுலா, ஆரியன், வர்ஷினி, அன்சிகா, ஆதீஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு :
Monday, 15 Aug 2022 11:30 AM - 12:30 PM
Hauptfriedhof Neue Friedhofstraße 1, 34537 Bad Wildungen, Germany.

கிரியை :
Monday, 15 Aug 2022 12:30 PM – 2:00 PM
Hauptfriedhof Neue Friedhofstraße 1, 34537 Bad Wildungen, Germany.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மகேந்திரன் (சுட்டா, மகன்)**

தொடர்புகளுக்கு :
**மகேந்திரன் (சுட்டா, மகன்)** – 004915221973177
**இராஜேந்திரன் (ராசன், மகன்)** – 0041765624884
**இராஜேஸ்வரி (மகள்)** – 0094771122914
**தியாகேஸ்வரி (மகள்)** – 0094718770907
**சாந்தி (மகள்)** – 0031687399667
**சுவேந்திரன் (சுதன், மகன்)** – 0041763289657
**தனேந்திரன் (தனம், மகன்)** – 00491727022517

## மின்கட்டண உயர்வு உணவு வகைகள் விலையேறும்

*கொழும்பு, ஒக. 13*

*மின்சார கட்டணம் அதிகரிப்பு காரணமாக உறைந்த உணவுகளான தயிர், ஐஸ்கிரீம் போன்றவற்றின் விலைகள் நிச்சயம் அதிகரிக்கும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளகள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தை தெரிவித்தார்.*

*அத்துடன், 75 வீத மின்சார கட்டண அதிகரிப்பின் காரணமாக உணவக உரிமையாளகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)*

## முன்னாள் அமைச்சர்களுக்கு ஆளுநர் பதவிகள்

*கொழும்பு, ஒக. 13*

*முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவை மத்திய மாகாண ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.*

*குறித்த பதவியை ஏற்பதற்குத் தயார் நிலையில் இருக்குமாறும், தற்காலிகமாகவேனும் இப்பதவியை ஏற்று நாட்டுக்கு சேவையாற்றுமாறும் அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன், மேல் மாகாண சபை ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளார். இவர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)*

## 100,000 தொன் யூரியா இறக்குமதி

*கொழும்பு, ஒக. 13*

*100,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.*

*ஒக்ரோபர் மாதம் உரம் கையிருப்பு நாட்டுக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது என விவசாய அமைச்சு கூறியுள்ளது. அதன்படி செப்ரெம்பர் 15 ஆம் திகதி பெரும்போக பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முடி யும் என எதிர்பார்ப்பதாகவும் விவசாய அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.*

*எஞ்சியுள்ள யூரியா உரத்தை பருவத்தின் தொடக்கத்தில் அறுவடை தொடங்கும் பகுதிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)*

## அலை அடித்து சென்ற இருவர் மீட்கப்பட்டனர்

*கொழும்பு, ஒக. 13*

*கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு இளம் பெண்களை பொலிஸ் உயிர்காப்பு பிரிவு பாதுகாப்பாக மீட்டுள்ளது.*

*நிலாவெளி கடற்பரப்பில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அனுராதபுரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இரண்டு யுவதிகளையே பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர். (அ)*

# மரண அறிவித்தல்



## சண்முகம் கெங்காசலம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 07 - 1941 | 07 - 08 -2022 |

யாழ். அனலைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கோணாவில், கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் கெங்காசலம் அவர்கள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சண்முகம் தங்கம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆறுமுகம் மாரிமுத்து, திரு. திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம் மற்றும் திரு. திருமதி கார்த்திகேசு பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா செல்லம்மா தம்பதிகளின் பெறாமகனும், சரோஜினிதேவி அவர்களின் அருமைக் கணவரும், காண்டீபன், பகீரதி, மயூரன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சரஸ்வதி மற்றும் மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விநாயகராஜா, நாகலெட்சுமி மற்றும் இராஜமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசாத், கேதாரநந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலவன், அகரன் ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், காலஞ்சென்ற கந்தையா, விஜயலெட்சுமி, இராசேந்திரம், கோபாலகிருஷ்ணன், தவமணி, சாரதாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பேரம்பலம், குகானந்தன், பத்மநாதன் மற்றும் துரைராஜா, கதிரவேலு ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும், வசந்தராணி, உருத்திராணி, விஜயராணி, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும், தில்லையம்பலம், பரராஜசிங்கம், செல்வராஜா ஆகியோரின் பாசமிகு சகலனும், செல்வநாயகி, தேன்மொழி ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 5:00 PM – 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Sunday, 14 Aug 2022 9:00 AM – 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Sunday, 14 Aug 2022 12:30 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**காண்டீபன் (மகன்).**

தொடர்புகளுக்கு :
**காண்டீபன் (மகன்)** – 0016477841694
**பிரசாத் (மருமகன்)** – 0016473006804
**பகீரதி (மகள்)** – 0016474024884
**மாசிலாமணி (சகோதரன்)** – 0016472316352

## எமது வாழ்நாள்...

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமக்கான நீதி வேண்டி போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் 2000 நாட்கள் நிறைவு பெற்றன. இதையொட்டி கிளிநொச்சியில் நேற்று பேரணி ஒன்றை அவர்கள் நடத்தினர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆரம்பமான பேரணி டிப்போ சந்திவரை சென்று கவனவீர்ப்புடன் நேற்றையநாள் போராட்டம் முடிவடைந்தது.

இந்தப் பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், செ. கஜேந்திரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் ஆகியோருடன் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

போராட்டத்தின் இறுதியில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அவர்கள் மனு ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

அதில், கடந்த காலத்தில் கையளிக்கப்பட்டும், சரணடைந்தும், கடத்தப்பட்டும், விசாரணைக்கெனக் கூட்டிச் செல்லப்பட்டும், வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான நாம் கடந்த 2000 நாட்களாக நீதி இன்றி போராடி வருகின்றோம்.

ஆரம்பத்தில், இலங்கை அரசிடம் நீதியை எதிர்பார்த்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சிறிசேனவை சந்தித்து நீதி கோரியபோது அவர் கொடுத்த வாக்கை நிறைவேற்றாது எம்மை ஏமாற்றியிருந்தார்.

இதன் காரணமாகவும் இலங்கையின் நீதித்துறையில் 'சிங்களவர்க்கு ஒரு சட்டம், தமிழருக்கு ஒரு சட்டம்' என்ற இனத்துவேச அணுகுமுறை காரணமாகவும் (உதாணமாக கொலை குற்றசாட்டு நீதிமன்றத்தால் நிரூபிக்கபட்ட சிங்கள இராணுவத்துக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி பதவி உயர்வும் வழங்கியுள்ளார். இது போல பல உதாரணங்கள் உண்டு)

இலங்ரகை அரசிடம் நீதி கிடைக்காது என்ற முடிவுக்கு வந்து சர்வதேசத்திடம் மட்டுமே நீதி கேட்டு போராடி வருகிறோம். எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த 138 மேற்பட்ட பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நிலை அறியாமலும், நீதி கிடைக்காமலும் இறந்து விட்டனர். நாமும் எமது வயோதிப காலத்தில் நோய்வாய்ப்பட்டு உடல் இயலாத நிலையிலும் சர்வதேசத்தில் நம்பிக்கை வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

எமது உறவுகளில் பெருந்தொகையானோர் 2009 இறுதி யுத்தத்தின் போது சரணடைந்தும், கையளிக்கப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், உயிரோடு கையளித்த சரணடைந்த உறவுகளை இறந்து விட்டதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய இரக்கமின்றி அறிவித்தார். இதில், 29ஆம் மேற்பட்ட கைக்குழந்தைகளும் சிறுவர்களும் அடங்குவர்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதில் பாதுகாப்புச் செயலராக இருந்து, கட்டளைகளை வழங்கி திட்டமிட்டு இனவழிப்பை மேற்கொண்டதில் இவருக்கு பெரும் பங்கு உண்டு. தானே பாதுகாப்பு செயலராக இருந்து மனித குலத்திற்கு எதிரான யுத்தம் மூலம் தமிழின அழிப்பை மேற்கொண்டவர் இவரே.

இவரின் இவ்வளவு அட்டூழியங்களுக்கும் இவரின் சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்து சகல வழிகளிலும் இவ் இனவழிப்பு யுத்தத்துக்கு முழு அதிகாரமும் கொடுத்து முன்னின்று வழிநடத்தினார்.

இவருக்கு துணையாக இவரது நம்பிக்கைக்குரிய படைத் தளபதிகளும், சிங்கள அதிகாரிகளும் தமிழரை சித்திரவதை செய்து, கொன்று, வன்புணர்ந்து, ஊனமாக்கி, தமிழரின் சொத்துக்களை கொள்ளையடித்து எம் இனத்தை இனவழிப்பு செய்தனர்.

இலங்கை அரசு பொறுப்புக்கூறும் என்று வீணாக எதிர்பார்த்து காலத்தை மேலும் கடத்தாது தமிழருக்கு இழைத்த அனைத்து குற்றங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட அனைவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ICC) நிறுத்தி நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதுவே ஐ.நா உட்பட்ட சர்வதேசமும் இறந்த பெற்றோர்களுக்கும், வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் வயோதிப பெற்றோரான எமக்கும் செய்யக் கூடிய சர்வதேச நீதியாகும். (ஐ)

## ஹோட்டலைவிட்டு...

வெளியேற வேண்டாமென்று கேட்கப்பட்டுள்ளார். தாய்லாந்தில் தங்கியுள்ள காலப்பகுதி வரை அவரை ஹோட்டலை விட்டு வெளியேறவேண்டாமென்று கேட்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ மேலும் மூவருடன் சிங்கப்பூரிலிருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு தாய்லாந்தை வந்தடைந்தார். அவர் டான் முவாங் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகேயுள்ள இராணுவ விமான நிலையத்தில் தரையிறங்கினார் என்று அறிய வருகிறது. முன்னதாக அவர் பயணித்த விமானம் பூகெட்டில் தரையிங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த விடயம் வெளியே கசிந்ததால் கடைசியில் விமானம் இராணுவ விமான நிலையத்தில் தரையிக்கப்பட்டதாக 'பாங்கொக் போஸ்ட்' தெரிவித்துள்ளது.

இதேநேரம், கோட்டாபய ராஜபக்ஷ தங்கியுள்ள ஹோட்டல் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவரின் பாதுகாப்புக்காக ஹோட்டலில் சிவில் உடை தரித்த பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், தாய்லாந்திலிருந்து வெளியேறும்வரை முன்னாள் ஜனாதிபதியை ஹோட்டலை விட்டு வெளியேறவேண்டாம் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் வீஸா காலவதியான அதேநாளிலில் அங்கிருந்து கோட்டாபய ராஜபக்ஷ பாங்கொக் பயணமானார். அவர் வேறொரு நாட்டில் நிரந்த புகலிடம் கோரவுள்ளார்.

இந்நிலையில் அங்கு அவர் தற்காலிகமாக தங்கியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## அம்பாந்தோட்டை...

காட்டி இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து தற்காலிகமாக கப்பலின் வருகை ஒத்திவைக்கப்பபட்டது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங் இது குறித்து கவலை வெளியிட்டார். எவ்வாறாயினும், கப்பலின் வருகையை எதிர்ப்பதற்கான உறுதியான காரணங்களை வழங்குமாறு அவரிடம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

இதேசெய்தியை இந்திய தூதரக அதிகாரிகளுக்கு வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இரு தரப்பினரும் உறுதியான காரணங்களை முன்வைக்காததால், இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியது. கப்பலை நிறுத்துவது இலங்கை அரசுக்கு புவிசார் அரசியல் தலைவலியாக மாறியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## இலங்கைக்கு...

இது இலங்கை பெறுமதியில் சுமார் 400 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொகையை 3 பகுதிகளாகப் பிரித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்க கொழும்பு பேராயர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் கூறப்பட்டது. (அ)

# திருக்கேதீச்சர திருப்பணி குழுவுக்கு 'யாழ் விருது' வழங்கி கௌரவமளிப்பு



யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ். மாநகர சபையின் யாழ் விருது திருக்கேதீஸ் வரம் ஆலய திருப்பணி சபையினருக்கு நேற்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை நல்லூர் பெருந்திருவிழாவை யொட்டி நல்லைக்குமரன் மலர் வெளியீடும் யாழ். விருது வழங்கலும் நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் நல்லைக்குமரன் மலரை வெளியிட்டதுடன் யாழ். விருதையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் திருக்கேத்தீச்சர ஆலய திருப்பணிக்கு உதவியமைக்காக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனுக்கும் சிறப்பு கௌரவம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் இ. த. ஜெயசீலன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உமாமகேஸ்வரன், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீடத்தின் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள், செஞ்சொல் செல்வர் ஆறுதிருமுருகன், யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச. முகுந்தன், தேசிய கல்வியியல் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி தி. கமலநாதன், மாநகர சபையின் சைவ சமய விவகார குழு உறுப்பினர்கள், மாநகர சபை உறுப் பினர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## கொரோனாவுக்கு...

3 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 4 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 ஆண்களும் 2 பெண்களுமாக 5 பேரும் அடங்குவர்.

இதேவேளை, நேற்றைய தினம் 162 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால், இதுவரை 6 இலட்சத்து 67 ஆயிரத்து 735 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு...

அந்த போர் கப்பலாகும், மலேசியா மற்றும் கம்போடியா நாடுகளில் போர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. இந்நிலையில், பாகிஸ்தான் திரும்பும் அந்தக் கப்பலை நிறுத்தி வைக்க பங்களாதேஷிடம் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. ஆனால், பங்களாதேஷ் அனுமதி மறுத்த நிலையில், அந்த கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்த இலங்கை அரசு அனுமதியளித்தது. நாளை மறுதினம் இந்தக் கப்பல் கராச்சிக்கு புறப்படுகின்றது. (ஐ)

## இருப்பிடமின்றி...

இருப்பிடம் இல்லாமல் ஒவ்வொரு நாடு நாடாக அலைகின்றார்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேலும், "இம்மாதம் 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இலங்கை வருவார் என்றும், அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்த 'மொட்டு' அணியினர் வாயடைத்து நிற்க, கோட்டாபய தாய்லாந்து நாட்டின் காலடியில் தற்போது விழுந்துள்ளார். அங்கும் அவர் 3 மாதங்களுக்கு மேல் தங்கியிருக்க முடியாது.

அவர் இனி எந்த நாட்டின் காலடியில் விழப்போகின்றார் என்பதை 'மொட்டு'க் கட்சியினரிடம் கேட்க விரும்புகிறேன். நாட்டைவிட்டு ஓடிய கோட்டாபய, இனி நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. அவர் மீண்டும் இலங்கை வந்தால் மென்மேலும் அவமானங்களைச் சந்திக்க வேண்டி வரும். மக்களை வாட்டி வதைத்த கோட்டாபய, இன்று உலக அரங்கில் அவமானப்பட்டு நிற்கிறார்" - என்றார்.

## சீனாவின்...

லான வழமையான கொடுக்கல் வாங்கல்களுக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்று இந்தியாவின் பெயரை குறிப்பிடாமல் சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலாகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், அம்பாந்தோட்டையிலிருந்து 700 கிலோமீற்றர் தொலைவில் பயணித்தவாறுள்ள யுவான் வாங் கப்பல் 15.2 நொட்ஸ் என்ற வேத்திலிருந்து 5 நொட்ஸ் வேகமாக தனது பயணத்தைக் குறைத்துள்ளது என்று செய்மதி தகவல்கள் தெரிவித்தன.

## காணாமல்...

பாராளுமன்றத்தில் நேற்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரைமீதான மூன்றாம் நாள் விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட உறுப்பினர் வினோநோகராத லிங்கம் உரையாற்றிய போது வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் 2,000 நாட்களை கடப்பது தொடர்பில் குறிப்பிட்டு கருத்துக்களை முன்வைத்தார்.

இதனையடுத்து செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு எழுந்து நின்றனர்.

வினோநோகராதலிங்கத்தின் உரை முடிவடையும் வரையில் பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் எழுந்து நின்ற போதும் சபையில் எவரும் இவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று வெள்ளிக் கிழமையுடன் 2000 நாட்களை எட்டியது. பாராளுமன்றில் கூட்டமைப்பினர் போராட்டத்தை மேற்கொண்டிருந்த போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. (ஐ)

# போராட்டக்காரர்களை கைது செய்யும் செயல்பாட்டை நிறுத்தவேண்டும் அரசு!

## ரஞ்சித் மத்துமபண்டார கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

**அவசரக்காலச் சட்டத்தைப் பயன்படுத்தி, போராட்டக்காரர்களைக் கைது செய்யும் செயற்பாட்டை அரசாங்கம் நிறுத்தவேண்டும் என்றும் இது சர்வதேச மட்டத்தில் இலங்கையை அந்நியப்படுத்தும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்களால் அன்றி பாராளுமன்றால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாவார்.

இந்த நாடு பல போராட்டங்களை கடந்துதான் வந்துள்ளது. 30 வருட கால யுத்தத்தை நாம் எதிர்கொண்டோம். 1971, 1989 களில் மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

இவ்வாறான பல சம்பவங்களை கடந்துவந்துள்ள போதிலும், தற்போது ஏற்பட்டுள்ளமையானது மக்கள் புரட்சியாகும். இந்தப் புரட்சியால்தான் ஜனாதிபதியும், பிரதமரும் வீட்டுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது.

ஆனால், தற்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவசர



கால சட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் கட்டுப்படுத்தி வருகிறது.

ஜனாதிபதியின் கதிரையில் அமர்தார்கள் என மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கைது செய்யப்படுகிறார்கள்.

வீடுகளை எரித்தவர்கள், கொலை செய்வதவர்களை கைது செய்தால் எந்தப் பிரச்னையும் எமக்கு கிடையாது.

போராட்டக்காரர்களை அடக்குவதானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கும்போது, சர்வதேச ஆதரவை கோரி நிற்கும் இந்த அரசாங்கமானது போராட்டக்காரர்களை அடக்குவது ஏற்புடையதல்ல.

அரந்தலாவை பிக்குகளை கொலை செய்ய துணை நின்றவர்கள் இன்று பாராளுமன்றில் உள்ளார்கள். ஸ்ரீமாபோதி, தளதா மாளிகை மீது தாக்குதல் மேற்கொண்டவர்களும் இன்று பாராளுமன்றில் உள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், தங்களின் உரிமைக்காக போராடிய மக்களை கைது செய்வதானது சரியான செயற்பாடா என அரசாங்கத்திடம் நாம் கேட்க விரும்புகிறோம்.

இது சர்வதேச ரீதியாக இலங்கையை மேலும் அந்நியப்படுத்தும் என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அரசாங்கம் இந்த விடயத்தில் விசேட கவனத்தை செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# மின் கட்டணத்துக்கு நிவாரணம் வழங்க எதிர்க்கட்சி கோரிக்கை!




கொழும்பு, ஓக. 13

75 வீத மின்சாரக் கட்டண உயர் வால் மக் கள் கடும் அவதிக்குள்ளா கியுள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஆகவே மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதற்கு கவனம் செலுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள் ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்குபோதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்லவும் இந்த கோரிக் கையை விடுத்திருந்தார். (அ)

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)

**தோற்றம்**
**08 - 08 -1964**

**மறைவு**
**04 - 08 - 2022**



யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 04.08.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன் - திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டிபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 4:00 PM – 8:00 PM Om Funeral Care Ltd 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK.

கிரியை :
Tuesday, 16 Aug 2022 11:30 AM – 3:00 PM Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA,United Kingdom.

தகனம் :
Tuesday, 16 Aug 2022 4:00 PM – 5:00 PM Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**நிர்மலா (மனைவி)** – 00447405428872
**உதயநேசன் (மைத்துனர்)** – 0014166481394
**கெங்கன்(சிவா, சகோதரன்)**–00447852183561
**திருமால் (திரு, சகோதரன்)** – 00447917800774
**பாலேஸ் (மைத்துனர்)** – 00447919371907
**காண்டீபன் (மைத்துனர்)** – 0094770872182

தகவல் :
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து




7.15 மணி : கதைவழி அறமொழி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- சந்திரமுகி
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்
05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-சர்வகட்சி அரசில் தமிழ் கட்சிகளின் வகிபாகம்




**இரவு**

07.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்-இலக்கியங்கள்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ஸ்ரீ

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராஅத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு